36

SEP. '50

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

4 அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 OCT 1950
MADRAS

கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 9

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
தீராத விளையாட்டுப் பிள்ளை 3
ஜக்கு – துப்பறிகிறான் - 'ஆர்வி' 4
மாக்னெட் விளையாட்டு - 'சுண்டு' 10
கண்ணன் கழகம் - படங்கள் 11
சூரக் கழுகு - 'அரகஜா' 17
பாம்பின் விளையாட்டு - 'சோமசன்மா' .. 25
சூது வெல்லுமா? - பி. எஸ். ராமையா .. 29
தபால்காரன் அபிமன்யு - பி. சீதா 36
பவழவல்லி – கி. ரா. 41
ரெயில் எஞ்சின் 46
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 47
வையாதே தம்பி! - 'ஜோதிமாமா' 50
பாரதியார் - கி. வா. ஜகந்நாதன் 52
குற்றம் யார்மேல்? - கே. ஆர். ராமசந்திரன் 57
கண்ணன் தபால் 61

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா
ரூ. 12/-

குழந்தைகளே!

போன மாதம் 12-ஆம் தேதி சனிக்கிழமை பிரமாத குஷியாக இருந்தது! யாருக்கு என்று கேட்கிறீர்கள்? எங்களுக்கும் 600 குழந்தைகளுக்கும். கண்ணன் கழகத்தின் கூட்டம் அன்று மயிலாப்பூரில் நடந்தது. அதை வெறும் கூட்டமென்று சொல்லக்கூடாது. பெரிய திருவிழாவாக இருந்தது. விகடம், விளையாட்டு, ஜால வேடிக்கை, பிரசங்கம் எல்லாம் இருந்தன. பரிசுகள் பலருக்குக் கிடைத்தன. எல்லோருக்கும் சிற்றுண்டி கிடைத்தது. அன்று நடந்ததை அப்படியே சினிமாப் பிடித்திருந்தால் எவ்வளவு ஜோராக இருக்கும் தெரியுமா? சில காட்சிகளை மாத்திரம் படம் பிடித்து இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். கண்ணன் கழகக் குழந்தைகளுக்கு எத்தனை உற்சாகம்! பெரியவர்கள்கூட வந்திருந்தார்கள். எல்லோருக்கும் ஒரே குதூகலமாக இருந்தது. இப்போது நினைத்தாலும் ஆனந்தமாக இருக்கிறது. வெளியூர்களிலேகூட இந்தமாதிரியான கொண்டாட்டங்களை நடத்தலாமென்று எண்ணியிருக்கிறேன். எந்த ஊரிலே அதிகப்படியான கண்ணன் கழக அங்கத்தினர்கள் இருக்கிறார்களோ, அந்த ஊரிலே நடத்தலாம் என்று தோன்றுகிறது.

கண்ணன் கழக அங்கத்தினர் என்று கண்டவுடனே குழந்தைகளை அடையாளம் கண்டுபிடித்துவிடலாம். கண்ணன் கழகப் பாட்ஜுகளை அவர்கள் அணிந்திருக்கிறார்களே! பாட்ஜுகளை இப்போது அனுப்பி வருகிறோம். யார் யார் மூன்று கூபன்களை அனுப்பினார்களோ அவர்களுக்கெல்லாம் நிச்சயமாக இந்தப் பதக்கம் கிடைக்கும். மூன்று கூபன்களையும் ஒன்றாகச் சேர்த்து அனுப்பினால் போதும்.

வியூமாஸ்டர் பரிசுக்காகக் கதைகள் வந்து குவிகின்றன. இந்தத் தடவை எல்லாக் கதைகளையும் படித்து முடிவு சொல்வதற்கு எவ்வளவோ சிரமப்படவேண்டும்போல் இருக்கிறது. என்ன ஆனால் என்ன? எல்லாக் கதைகளையும் நன்றாகப் படித்துப் பார்க்கத்தான் போகிறேன். பரிசு வாங்கப் போகிற கதை அடுத்த இதழில் வெளியாகும்.

காமிரா பரிசுப் போட்டியில் வெற்றிபெற்ற சௌ. விசாலத்தின் போட்டோ இதுவரை இங்கே வந்துசேரவில்லை. அடுத்த இதழில் நிச்சயம் வெளியிட முடியும் என்று நம்புகிறேன். அடுத்த பாராட்டுப் பரிசு பெற்ற சௌ. பி. சீதாவின் கதை இந்த இதழில் வெளிவந்திருக்கிறது.

கண்ணன் தபாலில் வெளியிடத் தினமும் வரும் கடிதங்களுக்குக் கணக்கே இல்லை. ஒருவர் ஒன்று எழுதி அதைக் 'கண்ண'னில் வெளியிட்டுவிட்டால், அதேமாதிரி நூறு எழுதி அனுப்பிவிடுகிறார்கள். அதிசயக் கணக்கு ஒன்று வந்தால் போதும்; உடனே ஆயிரம் கணக்குகள் 'கண்ணன் தபாலில் போடுங்கள்' என்று வந்துவிடும். புதிய புதிய விஷயங்களை எழுதுங்களேன். உங்கள் ஊரில் உள்ள அற்புதங்களை எழுதுங்கள். நீங்கள் கண்டு கேட்டுத் தெரிந்துகொண்ட நிகழ்ச்சிகளை எழுதுங்கள். திருப்பித் திருப்பி ஒரேமாதிரியான விஷயங்களைப் பார்த்தால் படிக்கிற குழந்தைகள் என்ன சொல்வார்கள்? எங்கே, இனிமேலாவது புதிய புதிய விஷயங்களைப்பற்றி எழுதியனுப்புங்கள், பார்க்கலாம்.

—ஆசிரியர்.

தீராத விளையாட்டுப் பிள்ளை

அம்மைக்கு நல்லவன், கண்டீர்!—மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கு மஃதே;
எம்மைத் துயர்செய்யும் பெரியோர்—வீட்டில்
யாவர்க்கு நல்லவன் போலே நடப்பான்.

—பாரதியார்.



ஜக்கு துப்பறிகிறான்

'ஆர்வி'

"ஹல்லோ! ஜக்குவா?"

"ஆமாம்; ஜக்குதான்."

"நான் உங்க மாமாவோட ஆபீஸிலே வேலை செய்யற கிளார்க். உங்கிட்டே ரகசியமாச் சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கு! எப்போ உன்னைப் பார்க்கலாம்?"

"உங்க பேரு?"

"அருணாசலம்!"

"அது சரி; எது விஷயமாய்ப் பேசணுமோ?"

"எல்லாம் நேரிலே சொல்றேனே. எப்போ உன்னைப் பார்க்கலாம்? அதைச் சொல்."

"சொல்றேன். ஆனால் என்னை வீட்டிலே இன்னிக்குப் பார்க்க முடியாதே. நான் சாயங்காலம்.."

"சினிமாவுக்குப் போகப் போறே; அதுதானே?"

"ஆ...மா...ம்."

"டார்ஜான் நியூயார்க்குக்குப் போகிறான் என்ற படத்துக்குத் தானே?"

"ஆ...மா...ம்."

"அதுக்கு முன்னாலே உன்னைப் பார்த்துடணுமே. உன் நன்மையை உத்தேசித்துச் சொல்றேன்."

"என் நன்மையையா?"

"ஆமாம், ஆமாம்."

"நீங்க பேசறது ரொம்ப வேடிக்கையாக இருக்கே."

"என்னைப் பார்த்தா நான் சொல்லப் போறது இன்னும் கூட வேடிக்கையா யிருக்கும்."

"ஓகோ! நீங்க டிராமாவிலே ஆக்ட் பண்ணுவதுண்டோ?"

"எங்க அசோஸியேஷன் டிராமாவிலே நான்தான் காமெடியன்."

"...டேடே, தேவலையே!"

"...ர் ஹீரோ பார்ட்டும் ...க்கறதுண்டு."

"...ன் பார்ட்டு?"

"...துவும் போட்டுக் ...ண்டு நடிப்பேன்."

"அது ரொம்பப் பொருத்தமாய் இருக்கும்; இல்லே?"

"ஆக்ஷேபணையில்லாமல்!"

"உங்களைப் பார்க்கணும்னு எனக்கு ரொம்ப ஆசையாய் இருக்கு. என் நன்மைக்காகப் பார்க்கணும்னு வேறே சொல்றேள். ஆனா என் நன்மையிலே உங்களுக்கு அவ்வளவு அக்கறை திடீர்னு ஏன் வந்ததுன்னு தெரிஞ்சாலும் தேவலே. சரி; ஒண்ணு செய்யுங்களேன்!"

"என்ன?"

"நான் இன்னிக்குச் சினிமாவுக்குப் போகாமலே இருந்துடறேன். நீங்களும் வராமலே இருந்துடுங்களேன்."

"ம்......வந்து......ம் வந்து..."

ஜக்கு கடகடவென்று சிரித்தான்.

"நீ என்னமோ விளையாட்டாகப் பேசறாப் போல இருக்கு. எனக்கும் விளையாட்டெல்லாம் ரொம்பப் பிடிக்கும். ஆனா...மத்தியானம் மூணு மணிக்கு உன்னைப் பார்க்கலாமா?"

"மூணு மணிக்கு நான் உங்களை வந்து சந்திக்கிறேன். நீங்கள் சிரமப்பட வேண்டாம்!"

"எனக்கு ஒரு சிரமமுமில்லே. நானே வறேன்."

"வேண்டாம். நான் வறேன்."

"ஊஹூம்."

"சே சே."

கடைசியில் ஜக்கு அடையாற்றுப் பாலத்தருகில் சந்திப்பதாக ஏற்பாடு செய்துகொண்டான்.

ஜக்குவுக்கு வயது பதினைந்து. அவனுடைய சாமர்த்தியத்தைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட சம்பாஷணையே போதும். அத்தனை சூடிகை. அடுத்த வருஷம்தான் எஸ். எஸ். எல். ஸி. போகப் போகிறான். ஆனால் ஆளைப் பார்த்தால் காலேஜில் படிக்கிற மாதிரி 'டிப் டாப்பாக' இருப்பான். சதா ஒரு பாண்ட்; ஜம்மென்று மடிப்புக் கலையாத ஷர்ட்; சின்ன ரிஸ்ட் வாட்சு. இயற்கையாகவே பையன் நல்ல சிவப்பு; ஜோரான கிராப்

புத்தலை; பேச்சோ அபாரம்! கேட்கவேண்டுமா?

மாமாவின் வீட்டில் தங்கிப் படித்துவந்தான் ஜக்கு. மாமாவுக்கு மூன்று வயசில் ஒரு பெண். வேறு குழந்தைகள் இல்லை. செல்லத்துக்குக் கேட்பானேன்?

அவனுடைய சிநேகிதர்கள் எல்லாரும், "உனக்கென்ன டாப்பா! மாமா எல்லாச் செலவும் செய்துவிடுகிறார். அப்பா அனுப்பற பணம் அப்படியே மிச்சம். மாமியோ, மாப்பிள்ளை ஆகப் போகிறாய் என்று கண்ணில் வைத்து இமையால் மூடுகிறாள். உனக்கென்ன கவலை?" என்பார்கள்.

ஜக்குவுக்கு அகம்பாவமே கிடையாது. ஆனால் சிறுவர்களுக்குரிய சேஷ்டைகளும் குறும்புத்தனமும் அவனிடம் அளவுக்கு அதிகமாய் இருந்தன. அவனுக்கு நண்பர்கள் ஏராளம். எதிரிகளும் ஏராளம்தான். நண்பர்களில் முக்கியமானவன் எதிர்வீட்டுப் பையன் நந்து. அவன் எதிரிகளில் முக்கியமானவன் 'உல்ப்' என்பவன். இவன் நடுவில் எல்லாம் ஜக்குவிடம் ரொம்பச் சிநேகமாய் இருந்தான். ஆனால் பையன்களுக்குள்ளே ஏற்படும் பொறாமையும் போட்டியும் இவனை முக்கிய எதிரியாக்கிவிட்டன. 'உல்ப்' என்று அவனுக்குப் பெயரே யொழிய, அவனுடைய செம்பட்டைத் தலையும் பூனைக் கண்களும் முரட்டு நடையும் பார்ப்பதற்கு அசல் புலி போலத் தோன்றும்.

இரண்டு பேரும் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். நல்லவனுக்கு நாலு பேர்; பொல்லாதவனுக்[illegible] துப் பேர் என்பார்களே[illegible] இவர்கள் விஷயத்தில் உ[illegible] கெட்டிக்காரப் பையன்[illegible] மார்க்கில் போட்டி ம[illegible] வாங்கக் கூடிய ஜக்குவி[illegible] பொறாமை உண்டு. அவர்களில் சிலர் உல்ப் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். ஆனால் ஜக்கு எதற்கும் அஞ்சுகிறவனல்ல; எதற்கும் சளைக்கிறவனல்ல. சிநேகிதர்களுக்காக உயிரையே வேண்டுமானாலும் விட்டுவிடுவான். அதனால் அவன் கட்சியும் வலுவான கட்சிதான். ஜக்குவின் வாக்குத்தான் அவன் கட்சிக்கு வேதவாக்கு. ஆகவே எதைச் செய்தாலும் முன் யோசனையுடன் செய்யாவிட்டால் முடியுமா?

'இந்த அருணாசலம் என்பது யார்? இவர் எதற்காக என்னிடம் ரகசியமாகப் பேச வேண்டும் என்கிறார். என்னு

சங்கர்...

டைய நன்மையை இவர் என்ன கண்டார்?' என்றுதான் அவன் ந்தனை ஓடியது.

மாமாவைக் கேட்கலாம் என்றால் அவர் ஆபீஸுக்குப் போயிருந்தார். அவர் ஒரு பாங்கின் கிளை ஏஜெண்டு. மாமாவுக்கு ஆபீஸ் இருக்கும் போது அவருடைய கிளார்க்குக்கு மட்டும் ஆபீஸ் இல்லையா?

'எப்படி இருக்க முடியும்? பாங்க் மத்தியானம் மூன்று மணிக்குத் திறக்கிறார்கள். அவர் பாங்கில் இருந்தால் எப்படி அந்த நேரத்தில் அடையாற்றுப் பாலத்துக்கு வர முடியும்? நிச்சயம் இதில் ஏதோ சூது இருக்கிறது. டெலிபோனில் குறிப்பிட்ட அந்த இடத்துக்குப் போவதா,

வேண்டாமா?' என்றெல்லாம் ஜக்கு குருட்டுயோசனை செய்துகொண்டிருந்தான். இரண்டு மூன்று தரம் மாமாவுக்கு டெலிபோன் செய்ய ரிஸீவரைக் கையில் எடுத்தான்; வைத்துவிட்டான்.

மாமா ரொம்பச் செல்லம் கொடுக்கிறவர்தான். ஆனால் ரொம்பக் கண்டிப்பான ஆசாமி. எது வேண்டுமானாலும் அவரே கேட்காமல் கொடுப்பார். ஆனால் இந்தமாதிரி அக்கப்போருக்கெல்லாம் அவர் இடங் கொடுக்க மாட்டார். ஆகையால் ஜக்கு தானே கண்டு பிடிப்பது தீர்மானித்துக் கொண்டான்.

மணி இரண்டடித்தது. அவன் வெளியில் புறப்படத் தயாரானான். போகும்போது நந்துவையாவது கூட்டிக் கொண்டு போகலாமா என்று முதலில் எண்ணினான். பிறகு டெலிபோனில் பேசியவருக்கு அதனால் தடையாக இருந்தாலும் இருக்கும் என்று தனியாகவே புறப்பட்டான்.

குளத்தங்கரையிலிருந்து 5-ஆம் நம்பர்பஸ்ஸில் ஏறித்தான் அடையாறு போகவேண்டும். வெகுநேரம் அவன் பஸ்ஸுக்காகக் காத்திருந்தான். அப்போது உல்பும் இன்னும் இரண்டு நண்பர்களும் மாட வீதிவழியாகப் போவதை ஜக்கு கவனித்தான். அவர்களும் அவனைக் கவனித்து விட்டுப் போனார்கள். இதற்குள் பஸ் வந்துவிட்டது. ஜக்கு பஸ்ஸில் ஏறிக்கொண்டான். முன் ஸீட்டில் நாற்பது வயதுள்ள ஒருவர் அடிக்கடி ஜக்குவைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தார்.

பாலத்தருகில் பஸ் நின்றதும் அவன் இறங்கினான். அவரும் அங்கேயே இறங்கிக்கொண்டார். ஜக்கு நிழலாக இருக்குமிடத்துக்குப் போனான். அவர் சுற்றும் முற்றும் பார்த்தார்.

கடைசியாக ஜக்குவிடம் வந்து, இப்போ மணி என்ன ஆகிறது?'' என்று கேட்டார். அவர் மீசையும் தாடியும் அருவருப்பாய் இருந்தன.

''சரியாக மூன்று ஆகிறது. அது சரி, நீங்கள் தான் அருணாசலமோ?'' என்று சட்டென்று கேட்டான் ஜக்கு.

''நான் அவனுடைய தம்பி. அவனால் சொன்னபடி வர முடியவில்லை. அதற்குத்தான் உன்னை அழைத்துவரும்படி என்னை அனுப்பினான்.''

''ஓகோ! என்னை அவருக்கு எப்படித் தெரியுமாம்?''

''எனக்குத் தெரியாது.''

''எதற்காக என்னைப் பார்க்கணுமாம்?''

''அதுவும் தெரியாது.''

ஜக்கு மேலே எதுவும் பேசாமல் அவருடன் கிளம்பினான். மயிலாப்பூர் போகும் பாதையிலேயே பல தெருக்கள், சந்துகள் வழியாக நுழைந்து கடைசியாக ஒரு பாழடைந்த பங்களாப் பக்கம் வந்தார்கள்.

''இந்தப் பங்களா யாருடையது?'' என்று கேட்டான் ஜக்கு.

''இதுவா? இது வந்து மாறனேரி ஜமீன்தாருடையது. இரண்டு வருஷமாய்க் காலியாகத்தான் கிடக்கிறது.''

அந்தப் பங்களாவை ஒட்டி ஒரு சின்ன வீடு தெரிந்தது.

"அதுதான் எங்கள் வீடு. நீ இந்தப் பங்களாவின் போர்டிகோவிலேயே உட்கார்ந்திரு. எங்கள் வீட்டில் உட்காரக் கூட இடம் இருக்காது. நான் போய் அண்ணாவை வரச் சொல்கிறேன்" என்றார் அவர்.

ஜக்கு அதற்கும் சம்மதித்தான். அந்த மனிதர் போனதும் ஜக்கு சுற்றும்முற்றும் பார்த்தான். அந்தப் பங்களா காம்பவுண்டை ஒட்டி அந்தச் சின்ன வீட்டின் பின்புறம் இருந்தது. பக்கத்தில் ஒரு மரமும் இருந்தது.

கால் மணி ஆகியும் யாரும் வரவில்லை. ஜக்கு காலாறக் காம்பவுண்டு ஓரமாய் நடந்துகொண்டிருந்தான். அப்போதும் அந்த அருணாசலத்தைக் காணவில்லை. 'சரி; என்னதான் நடக்கிறது என்று கடைசி வரையில் பார்த்துவிடுவோம்' என்று மெதுவாகப் பங்களாப் படிகளின் மேல் ஏறினான். அந்த வீடு ஏதோ பாழடைந்ததுபோல் வெளிக்குத் தோன்றினாலும் கட்டிடம் உறுதியாகவும் உள்ளெல்லாம் அழகாகவும் இருந்தது. வாசல் வராந்தாவை ஒட்டிய அறை ஜன்னல் தற்செயலாகக் காற்றில் திறந்துகொண்டது. ஜக்கு உள்ளே எட்டிப்பார்த்தான். அந்த அறையில் சாமான்களே ஒன்றும் இல்லை.

பூட்டுக்கூடத் துருப்பிடித்துப் போயிருந்தது. இரண்டு தடவை அந்தப் பூட்டை ஆட்டியதும் அது படக்கென்று திறந்துகொண்டு விட்டது. ஜக்கு பயந்துபோனான். 'என்னடா இது? தலைவலி போகத் திருகுவலி!' என்று அந்தப் பூட்டைப் பூட்டியபடியே மூடப் பார்த்தான்.

அப்போது மேல் மாடியில் யாரோ நடப்பது போலவும் மேஜைகளை இழுப்பது போலவும் அரவம் கேட்டது. ஜக்குவுக்குப் பெரிய யோசனையாகி விட்டது.

'இந்த அருணாசலம் என்பது யார்? எதற்காக என்னை இங்கே அழைத்துவந்து நிறுத்திவைத்திருக்கிறார்? மேலே ஏதோ சத்தம் கேட்டதே அது என்ன? கதவுப் பூட்டு ஏற்கனவே திறந்து இருந்ததா, அல்லது இப்போதுதான் திறந்துகொண்டதா? தைரியமாக உள்ளே நுழைந்து போய்ப் பார்த்தால் என்ன?' என்று யோசனை செய்துகொண்டே ஜக்கு போர்டிகோவில் வந்து நின்றான். எதிரே ஒரு மனிதர் அவசர அவசரமாக வந்தார்.

"நீதானே அப்பா ஜக்கு!"

"ஆமாம். நீங்கள்-?"

"நான்தான் அருணாசலம்!"

ஜக்கு ஆளை நன்றாகக் கவனித்துப் பார்த்தான். பஸ்ஸில் வந்தவரே ஒரு சமயம் வீட்டுக்குப் போய் முகக்ஷவரம் செய்துகொண்டு வந்திருக்கலாமோ என்று தோன்றியது.

"தடால்!" என்று மேல் மாடியில் மறுபடியும் சத்தம் கேட்டது. அருணாசலமும் ஜக்குவும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போய் நின்றனர்.

(தொடரும்)

'மாக்னெட்' விளையாட்டு

'சுண்டு'

காந்தம் இருக்கிறதே அதற்கு ஓர் அபூர்வ சக்தி உண்டு. காந்தச் சட்டத்தின் இரு முனைகளிலும்தான் காந்தச் சக்தி இரும்பை ஆகர்ஷிக்கும். நடுவில் இழுக்காது. அதேபோலத் தான் இந்த விளையாட்டு.

ஒருவன் ஆட்டத்தின் முதலில் கோட்டில் நிற்பான். மற்றவர்கள் தூரத்தில் நிற்பார்கள். அவன் 'ரெடி' என்று சொல்லிவிட்டு அந்தக் கூட்டத்தில் யாராவது ஒருவனைத் துரத்திப் பிடிப்பான். உடனே அவர்கள் இருவரும் கையைக் கோத்துக் கொண்டுவிட வேண்டும். பிறகு இருவரும் சேர்ந்து மற்றவர்களை ஒவ்வொருவராகப் பிடிக்கவேண்டும். நாலு பேரைப் பிடித்தாகி விட்டது என்றால் நடுவில் இருப்பவர்கள் ஒருவரையும் பிடிக்க முடியாது. இந்தக் கடைசியிலுள்ளவன் ஒரு கையாலும் அந்தக் கடைசியில் உள்ளவன் ஒரு கையாலும்தான் பிடிக்கலாம். என்னதான் விளக்கமாகச் சொன்னாலும் ஆடினால்தான் அந்தச் சுவாரஸ்யம் தெரியும். ஆடிப் பாருங்களேன்! மாக்னெட்டைப் போல உங்களை அந்த ஆட்டம் அப்படியே கவர்ந்துவிடும்.

ஆகஸ்டு 12-ஆம் தேதி மயிலாப்பூரில் கண்ணன் கழகக் கூட்டம் ஜாம் ஜாம் என்று நடந்தது. 600 அங்கத்தினர்களுக்கு மேல் இதற்கு வந்தார்கள். மழை இதோ வந்துவிடுவேன என்று பயமுறுத்திக்கொண்டிருந்தும் அத்தனை அங்கத்தினர்களும் அதைக் கொஞ்சங்கூடப் பொருட்படுத்தவில்லை. ஒரு பக்கம் ஜால வித்தை என்ன; ஒரு பக்கம் பாடஜ் விநியோகம் என்ன; இன்னொரு பக்கம் மைசூர்ப்பாகும் மிக்சரும் மிட்டாய்களும் டீயும் துவம்சமாவதென்ன; வேறு ஒரு பக்கம் விகடக் கச்சேரியின் அவுட்டுச் சிரிப்பும் கோலாகலமும் என்ன; இத்தனைக்கும் நடுவில் விளையாட்டுப் போட்டிகளில் சிறுவர்களும் சிறுமிகளும் கலந்துகொண்டு பரிசு பெற்றதென்ன-இப்படி இந்தக் கூட்டம் ஜிஞ்ஜாமிருதமாக நடந்தது. வானமாரி பெய்வதற்குப் பதில் அங்கத்தினர்கள் தலைவரின் பிரசங்க மாரியைக் கேட்டுக் குதூகலித்தார்கள். அந்தக் காட்சிகளைத்தான் நமது போட்டோ நிபுணர் அடுத்த பக்கங்களில் தத்ரூபமாகக் காட்டுகிறார்.

போட்டோ: எம். டி. வின்ஸெண்ட்

'பாட்ஜ்' வாங்கவும் க்யூ!

பெண் குழந்தைகளின் வரிசையில் ஒரு பகுதி

கழக அங்கத்தினர்களுக்கு 'பாட்ஜ்' வழங்கப்படுகிறது

தலைவர் பேசுவதைக் கவனித்துக் கேட்கும் கூட்டத்தின் ஒரு பகுதி

குழந்தைகள் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்கிருர்கள்

பெண் குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டி நடக்கிறது



விகடக் கச்சேரியில் பாட்டி' பேரன் பேத்திகளிடம்
பேசிக்கோண் டிருக்கும் கட்டம

விகட மாமா அபிநயம் பிடித்துக் காட்டுகிருர்

தலைமை வகித்த ஸ்ரீ கி. சந்திரசேகரன் பேசிக்கொண்டிருக்கிறார்

விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப் படுகின்றன.

சூரக் கழுகு

'அரககஜா'

வேட்டுவன் காட்டுக்கு வேட்டையாடப் போனான். காடு என்றால் அதைப்போலப் பெரிய காடு இந்த உலகத்திலேயே வேறு இல்லை. மரங்களெல்லாம் எவ்வளவு பெரியவை! அடேயப்பா! நாற்பது ஆட்கள் சுற்றி நின்றாலும் ஒரு மரத்தின் சுற்றளவைக் கட்டிப் பிடிக்க முடியாது. உயரத்தை அண்ணாந்து பார்க்கவோ கழுத்துத்தான் வலிக்கும்; உச்சாணிக் கிளைகளைப் பார்க்க முடியாது.

வேட்டுவனுக்கோ வேட்டையில் ஒரு குருவிக் குஞ்சுகூடக் கிடைக்கவில்லை. சாயங்காலம் ஆகிவிட்டது. அவனுக்குக் கால்கள்தான் வலித்தன. மிகுந்த அலுப்புடன் திரும்பினான். காட்டின் கோடிக்கு வந்ததும் ஏதோ முனகல் சத்தம் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான்.

பெரிய மரக்கிளை ஒன்றில் ஒரு பெரிய கழுகு உட்கார்ந்திருந்தது. அதன் இறகு ஒன்று ஒடிந்து அதிலிருந்து ரத்தம் பிரவாகமாய் வடிந்து கொண்டிருந்தது. அவனும் எவ்வளவோ பறவைகளையும் மிருகங்களையும் பார்த்திருக்கிறான். ஆனால் இத்தனை பெரிய கழுகை அவன் இதுவரையில் பார்த்ததே இல்லை. இந்தக் காலத்து 'ஸ்கை மாஸ்டர்' விமானத்தை விட அது பெரிதாய் இருந்

தது. வேட்டுவன் முதலில் பயந்துபோனான். அவன் கை உடனே தன்னை அறியாமல் வில்லை வளைத்து அம்பை எடுத்தது. ஆனால் அந்த ராட்சஸக் கழுகு முனகுவதை நிறுத்தி விட்டு, "எய் மனிதா, பொறு; என்னைக் கொல்லாதே! நான் இந்த உலகத்தைச் சேர்ந்த பறவையல்ல. தெரியாமல் வந்து மாட்டிக் கொண்டுவிட்டேன்" என்றது.

கழுகு வாயைத் திறந்து மனிதர்களைப் போல் பேசுவதைக் கண்டு வேட்டுவன் மலைத்தான். கழுகு மேலும் பேசிற்று: "என்னைக் கொன்று நீ என்ன செய்யப்போகிறாய்? அதற்குப் பதில் என்னைக் கொண்டு போய்ச் சொஸ்தப் படுத்தினாலும் உனக்குப் புண்ணியம் உண்டு. ஏன் தயங்குகிறாய்? அந்த வில்லைக் கீழே போட்டு விட்டு என்னை உன் வீட்டுக்குக் கொண்டு போ! என்னால் உனக்குப் பெரிய நன்மை ஏற்படாது என்று எப்படிக் கண்டாய்?"

வேட்டுவன் யோசித்தான். 'இந்த விசித்திரக் கழுகினால் நமக்கு அதிருஷ்டம் ஏற்படுமோ என்னவோ! யார் கண்டது!' என்று எண்ணி அதை வீட்டுக்குக் கொண்டுபோக முடிவு செய்தான்.

வீட்டுக்குச் சென்றதும் அதன் ஒடிந்த இறகில் பச்சிலையை வைத்துக் கட்டிக் காயத்தைக் குணப்படுத்தினான். பசிக்கு வேண்டிய ஆகாரங்களைக் கொடுத்தான். அவ்வளவு பெரிய கழுகுக்கு ஆகாரம் கொடுப்பது என்பது லேசா? இப்படிச் சில நாட்கள் கழிந்தன.

"இதோ பார், வீட்டில் இருப்பதையெல்லாம் கொடுத்து விட்டேன். முன்பு வேட்டையாடிக் கொண்டு வந்திருந்ததையும் உனக்கே கொடுத்துவிட்டேன். இனி நான் எங்கே போவது?" என்றான் அவன்.

"பயப்படாதே. --- அதோ நாளைக்கு என்று கொல்லையில் கட்டியிருக்கிறாயே, அந்த மானைக் கொண்டுவா" என்றது கழுகு.

வேட்டுவன் அதையும் கொண்டு வந்து நிறுத்தினான். கழுகு மிகவும் சந்தோஷப் பட்டு, "வேட்டுவா! ஐம்பது அடி உயரத்தில் ஒரு மரத்தை நடு" என்றது.

அவன் நட்டு முடித்ததும் கழுகு அதன்மீது ஏறி உட்கார்ந்தது. பிறகு 'விர்'ரென்று விண்ணில் கண்ணுக்கு எட்டாத தூரத்துக்குப் பறந்து மறைந்துவிட்டது. இவ்வளவு எல்லாம் செய்தும் கழுகு தன்னை ஏமாற்றிவிட்டதே என்று ஏங்கினான். அந்தச் சமயத்தில் மின்னல் ஒளியைப் போலக் கீழே திரும்பி வந்த கழுகு லபக்கென்று அவனைக் கால் நகங்களில் லாவிப் பற்றிக் கொண்டு மேலே பறந்து சென்றது. வேட்டுவன் பயந்து, "எங்கே என்னைத் தூக்கிச் செல்கிறாய்?" என்றான்.

"பயப்படாதே. இதோ என்னுடைய சகோதரி இருக்கும் புயல் மண்டலத்துக்கு வந்து விட்டோம். அங்கிருந்து என்

மனைவி இருக்குமிடம் போக வேண்டும். அவள் நான் எங்கேயோ போய் இறந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கிறாள். நான் வெளியிலே உட்கார்ந்திருப்பேன். நீ போனதும் நான் அனுப்பியதாகச் சொல்லு'' என்று வேட்டுவனை ஒரு கிணற்றடியில் இறக்கிவிட்டுச் சூரக் கழுகு மறைவாக உட்கார்ந்து கொண்டது.

கதவை இடித்தான் வேட்டுவன்.

''யார் அது?'' என்று கேட்டது சூரன் மனைவி.

''என்னைச் சூரன் அனுப்பினான். நான் ஒரு சாதாரண மனிதன்'' என்றான் வேட்டுவன். உடனே அவனுக்குச் சூரக் கழுகின் மனைவி ஆசார உபசாரமெல்லாம் செய்தது. கடைசியாக எழுந்து உள்ளே போய் முந்திரிக் கொட்டை

ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து வேட்டுவனிடம் கொடுத்தது.

வேட்டுவன் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு, சூரனிடம் திரும்பி வந்தான்.

நடந்ததை அறிந்த சூரன் குதூகலத்துடன் வேட்டுவனைச் சுமந்துகொண்டு அவனுடைய ஊரை நோக்கிப் புறப்பட்டது. ஊருக்குச் சிறிது தூரத்தில் வந்ததும் சூரன் அவனைக் கீழே இறக்கி விட்டுவிட்டு, "வேட்டுவா, கடைசியாக நீ அதிருஷ்ட சாலிதான். இது என்னவோ அல்பமான முந்திரிக்கொட்டை என்று எண்ணாதே. இதோ இரண்டு விரல்களால் இதை அமுக்கினால் இதன் மேல்மூடி திறந்துகொள்ளும். முதலில் ஒரு சின்னச் சாட்டை கிடைக்கும். பிறகு கத்தியை எடுத்து உள்மூடியைத் திறந்துவிட்டால் கோழி, ஆடு, மாடு, மான், குதிரை, யானை முதலிய மிருகங்களும், காடை, கவுதாரி, மைனா, பஞ்சவர்ணக் கிளி, வெண்புறா முதலிய பறவைகளும் வந்துகொண்டே இருக்கும். உனக்கு எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவுக்கு அவைகளை விற்றுவிடு. மீதியை இந்தச் சாட்டையால் இந்தக் கொட்டைக்குள்ளேயே விரட்டினால் அவ்வளவும் போய்விடும். ஜாக்கிரதையாக வைத்துக் கொள்" என்று சொல்லிக் கொடுத்தது.

வேட்டுவன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு கால்நடையாகப் புறப்பட்டான். வழியில் அழகான சோலை ஒன்று இருந்தது. வேட்டுவன் சிறிது இளைப்பாறிச் செல்ல எண்ணி அங்கே உட்கார்ந்தான். முந்திரிக் கொட்டையைத் திறந்து பார்க்க அவன் மனம் துடித்தது. வீட்டுக்குப் போனால் மனைவியும் மகனும் தனக்குக் கிடைத்த அருமையான வஸ்துவைக் கண்டு எவ்வளவு சந்தோஷப் படுவார்கள் என்பதை எண்ணியதுமே அவன் ஆவல் அதிகரித்தது. கையால் அழுத்திக் கொட்டையைத் திறந்தான். சின்னச் சாட்டையை எடுத்துக் கொண்டான். பிறகு உள்மூடியைத் திறந்ததும், அடேயப்பா! எவ்வளவு பிராணிகள், எவ்வளவு மிருகங்கள், பட்சிகள்! உலகத்திலுள்ள உயிர்ப் பிராணிகள் முழுவதுமே இருப்பதுபோல எல்லாம் வெளிவந்து ஓடத் தலைப்பட்டன. வேட்டுவனுடைய மனம் சந்தோஷத்தினால் துள்ளிக் குதித்தது. ஹய், ஹய் என்று கூத்தாடினான்.

துரதிருஷ்டம் என்பது அதுதான்! அவன் கையில் இருந்த சாட்டையை ஏதோ ஒரு மிருகம் ஓடிய அவசரத்தில் தட்டிவிட்டு ஓடிப் போயிற்று. போனது போனதுதான்!

இனி எப்படி இவ்வளவு பிராணிகளையும் உள்ளே விரட்டி அடைப்பது?

வேட்டுவனுக்கு அழுகையே வந்துவிட்டது. பின்னால் திடீரென்று ஏதோ சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தான். விசித்திரமான ஒரு குள்ளன். நீளமான தாடியும் மீசையுமாய்

முயல்மீது சவாரி செய்து கொண்டு வந்தான். குள்ளன் அருகில் வந்து வேட்டுவன் அழுவதைப் பார்த்துவிட்டு, "அடேய், உன் பெயர் வேட்டுவன்தானே?" என்று கேட்டான்.

வேட்டுவன் ஆச்சரியத்துடன், "ஆமாம், என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

"இதோ பார்த்தாயா? இந்தச் சாட்டை இருக்கும் வரையில் எனக்கு எல்லாமே தெரியும். இப்போது நீ எதற்கு அழுகிறாய் என்பதும் எனக்குத் தெரியும். நீ வீட்டில் இருக்கும் உன் மகனை என்னோடு அனுப்புவதாயிருந்தால் நான் இந்தப் பிராணிகளை மறுபடியும் முந்திரிக் கொட்டைக்குள் விரட்டி விடுவேன்" என்றான் குள்ளன்.

"சரி; நான் சம்மதிக்கிறேன்."

"அப்படியானல் இதோ பார்!" என்று சாட்டையை மூன்று தரம் சொடுக்கினன் குள்ளக் கிழவன். என்ன ஆச்சரியம்! வெளியில் ஓடிவந்த மிருகங்களெல்லாம் அந்தக் கொட்டைக்குள் அடங்கிவிட்டன.

"நீயே வைத்துக்கொள் இந்தச் சாட்டையை. என்னிடம் வேறு இருக்கிறது" என்று சொல்லிவிட்டுக் குள்ளன் திடீரென்று மறைந்துவிட்டான்.

வேட்டுவனும் தன் வீட்டை நோக்கிப் புறப்படலானன். மறுநாள் பொழுது விடியும் சமயம். எதிரே ஒரு வாலிபன் தோளில் ஒரு மூட்டையைச் சுமந்துகொண்டு வருவதைக் கண்டான். அவன்தான் அவன் மகன் ரம்மு. தெரியாத்தனமாகத் தன் மகனை அனுப்புவதாகச் சொல்லிவிட்டோமே என்றுபிறகுதான் அவன் வருத்தப்பட்டான். ரம்மு இப்போது குள்ளக் கிழவனைச் சேர்ந்தவன். வேட்டுவன்தான் வாக்குக் கொடுத்துவிட்டானே! தனக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு களிக்க வேண்டிய இந்த அழகான வாலிபனை இனி அவன் காணப் போவதில்லை. வேட்டுவன் மனம் இடிந்து வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

வாலிபனே ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து ஒரு வருஷம் கழித்துக் குள்ளக் கிழவன் வீட்டையடைந்தான். ரம்முவுடைய சாமர்த்தியத்தையும் அடக்கத்தையும் கண்டு குள்ளக் கிழவன் சந்தோஷப்பட்டான். குள்ளக் கிழவன் இட்ட ஏவல்களையெல்லாம் ரம்மு ஒரு நொடியில் செய்து முடித்து விடுவான். குள்ளக் கிழவன் நாளடைவில் அவனைத் தன் சொந்த மகன் போலவே பாராட்டத் தொடங்கினன்.

இது இப்படியிருக்க, குள்ளக் கிழவனுடைய பிரதேசத்தை ஒட்டி, தாரகன் என்று ஒரு ராட்சஸனுடைய தேசம் இருந்தது. அவனுக்குச் சம்பா என்று ஒரு மானிடப் பெண். இளம் வயசு; புருபுருவென்ற கண்கள்; ரோஜா மலரின் நிறம்; ஸ்வர்ணப் பதுமைபோல அவ்வளவு அழகாய் இருப்பாள். அழகில் அவளுக்கு இணை யாருமே இல்லை. குப்பையில் மாணிக்கம் போன்ற அந்தச் சம்பாவும் ரம்முவும் அடிக்கடி சந்திப்பார்கள். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் அடங்காத அன்பு கொண்டுவிட்டார்கள். ஒரு நாள் அவர்கள் சந்திக்காவிட்டால் எதையோ பறிகொடுத்தவர்களைப்போல இருப்பார்கள். தாரகன் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டான் என்று அவர்களுக்குத் தெரியும். அதனல் எப்படியாவது அந்த இடத்தை விட்டுத் தப்பித்துச் செல்ல முடிவு கட்டினர்கள்.

ஆனல் அது அவ்வளவு சுலபமான காரியமா? ரம்மு குள்ளக் கிழவனிடம் ஒரு நாள் விஷயத்தைச் சொன்னன். அதைக் கேட்டு, "பயப்படாதே குழந்தாய்! நம்முடைய வெண் முயல் இருக்கிறதே, அதை

எடுத்துக்கொண்டு தப்பித்துக் கொள்ளலாம்'' என்று குள்ளக் கிழவன் யோசனை சொல்லிக் கொடுத்தான். அதன்படியே ரம்முவும் சம்பாவும் வெண் முயல்மீது ஏறிக்கொண்டு ஒரு நாள் இரவு புறப்பட்டார்கள்.

பொழுது விடிந்தது. சம்பாவைக் காணாததை அறிந்த அவள் பாட்டி தன் மகனைக் கூப்பிட்டு உடனே அவளைத் தேடிவர அனுப்பினாள். அவன் அசுரன் மகன் அசுரன் அல்லவா? சம்பாவும் ரம்முவும் தப்பிப்போன வழியிலேயே தேடிக்கொண்டு அவன் கன வேகமாய் வந்துவிட்டான். சம்பாவுக்கு ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்று தெரிந்தது.

''பின்னால் திரும்பிப் பாருங்கள்; கறுப்புக் குதிரையா வருகிறது?''

''ஆமாம்; கறுப்புக் குதிரை தான்!''

''அடடா! என் அப்பாவாகத்தான் இருக்கும். நாம் தொலைந்தே போவோம்'' என்றாள் சம்பா. ''ஒரு காரியம் செய்வோம்; இந்தக் குளிகையை வாயில் போட்டுக்கொண்டால் நீங்கள் கல்லாக மாறிவிடுவீர்கள். நான் கொல்லனாக மாறி விடுகிறேன். வேறு வழியில்லை'' என்றாள் மீண்டும்.

அந்தக் கறுப்புக் குதிரை அவர்கள் அருகில் நெருங்குவதற்குள் கல்லாகவும் கொல்லனாகவும் மாறிவிட்டார்கள். குதிரையில் வந்த தாரகன் இவர்களைத் தவிர வேறு யாரையும் காணாததால் அடியோடு ஏமாந்து போனான். அவன் தலை மறைந்ததோ இல்லையோ, சம்பாவும் ரம்முவும் பழைய நிலையையடைந்து பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள்.

ஆனால் சம்பாவின் பாட்டி ஏமாறவில்லை. ''போடா மட்டி, நீ ஓர் ஆண்பிள்ளை மாதிரி!'' என்று சொல்லித் தானே புறப்பட்டாள்.

சம்பா இதை உணர்ந்தாள். உடனே சேறு நிறைந்த ஏரியாக மாறி ரம்முவை அன்னப் பட்சியாக மாற்றினாள்.

ராட்சஸிக்கு இந்தச் சூது தெரிந்துவிட்டது. அவள் தண்ணீரைத் தொடுவதில்லையாகையால் கரையிலேயே உட்கார்ந்து கொண்டு, ''பையா, பையா! கரைக்கு வா! நானே உனக்கு வேண்டியதை யெல்லாம் தருகிறேன்'' என்று ஆசை வார்த்தை கூறினாள்.

ஆனால் அன்னப்பட்சி கண்ணைத் திறக்கவேயில்லை. சம்பா கண்ணைத் திறக்கக் கூடாது என்று எச்சரித்திருந்தாள். ராட்சஸி விடுகிற வழியாய் இல்லை. ''அடேய், உண்மையான சம்பா நான் தானடா! வேண்டுமானால் கண்ணைத் திறந்து பார்!'' என்றாள்.

ரம்மு உண்மையை அறியும் ஆவலில் கண்ணைத் திறந்து பார்த்துவிட்டான். அவ்வளவுதான்! அடுத்த கணம் அவன் கண்பார்வை போய்விட்டது. ராட்சஸி அவனைக் குருடாக்கி விட்டுத் திரும்பினாள்.

அவள் சென்ற பின் சம்பாவும் ரம்முவும் மனித உருவடைந்தனர். ரம்மு பொட்டையாகி

விட்டதைக் கண்டு, "நான் சொல்லியிருந்ததைக் கேட்காமல் கண்ணைத் திறந்து விட்டீர்களே! சரி; இருக்கட்டும். நான் திரும்பிப் போய் எப்படியும் ஒரு நாழிகையில் திரும்பிவிடுகிறேன்" என்று சொல்லி மறைந்தாள்.

சம்பாவின் பாட்டி காட்டில் ஒரு மரத்தடியில் படுத்திருந்ததைக் கண்டு நண்டு போல மாறினாள். ராட்சஸி அகோரத் தூக்கமாய்த் தூங்கிக்கொண்டிருந்தாள். மெதுவாக அந்த நண்டு கிழவியின் கைகளில் இருந்த அந்த இரண்டு கண்களையும் எடுத்துக்கொண்டு அதற்குப் பதில் இரண்டு கூழாங்கல்லை வைத்துவிட்டு மறைந்தது.

தாரகன் ராட்சஸக் கிழவியைப் பார்த்து, "என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

"இதோ பார், அந்தப் பயலுடைய இரண்டு கண்களையும் கொண்டு வந்துவிட்டேன்."

"எங்கே?"

ராட்சஸி கைகளை விரித்தாள். இரண்டு கூழாங்கற்கள்!

"இதுதான் நீ கொண்டு வந்ததோ?" என்று அவன் கோபத்துடன் அவளுடைய இரண்டு கண்களையும் பிடுங்கி எறிந்தான்.

இங்கே சம்பாவும் ரம்முவும் வேட்டுவன் வீட்டை அடைந்தார்கள். வேட்டுவனுடைய சந்தோஷத்துக்கு எல்லையே இல்லை.

"அடுத்த வாரமே ஒரு நல்ல முகூர்த்தம் இருக்கிறதாம். இனிமேல் தாமதம் செய்யக் கூடாது" என்று எல்லா ஏற்பாடுகளையும் அவசர அவசரமாகக் கவனித்தான்.

சம்பாவுக்கும் ரம்முவுக்கும் வெகு விமரிசையாகக் கல்யாணம் நடந்தது. சூரக் கழுகும் அதன் மனைவியும் குள்ளக் கிழவனும் அவனுடைய அதிசய முயலும் வந்து அதியற்புதமாகக் கல்யாணத்தை நடத்திக் கொடுத்தார்கள்.

வேட்டுவன் சூரக் கழுகு கொடுத்த முந்திரிக்கொட்டையை ரம்முவின் கையில் ஒப்பித்துவிட்டு நிம்மதியாக வாழ்ந்தான்.



பாம்பின் விளையாட்டு

'சோமசன்மா'

நல்ல பன்னிரண்டு மணி வெயில்; மண்டை யைப் பிளக்கிறது. அப்போது ஒரு விறகுவெட்டி, "மடார், மடார்" என்று மரத்தைப் பிளந்துகொண் டிருந்தான். வெயில் அடித்தாலும் மழை பெய்தாலும் அவன் வேலை யைச் செய்தால்தானே அன்று கூலி கிடைக்கும்! அதனால் அவன் விறகு பிளந்துகொண் டிருந்தான்.

விறகெல்லாம் பிளந்து ஒரே கட்டாகக் கட்டி அவன் தலை யில் அதை வைத்துக் கொள்ளப் போனான். அப் போது, "அப்பா" என்று மிகவும் மெதுவான ஒரு குரல் கேட்டது. விறகு வெட்டி நாலா பக்கமும் திரும்பிப் பார்த்தான். ஒரு வரையும் காணோம். மறு படியும் தூக்கி வைத்துக் கொள்ளப்போனான். மறு படியும், "அப்பா" என்று அந்தக் குரல் கேட்டது.

'என்னடா இது? குரல் மட்டும் கேட்கிறது; ஆளைக் காணோம். ஒருவேளை புளியமரத்துப் பிசாசாய் இருக்குமோ?' என்று அவன் யோசித்து மரத்தை அண்ணாந்து பார்த்தான்.

"என்னப்பா! இதோ உன் காலடியில் கிடக்கிறேன். மேலே பார்க்கிறாயே?" என்று அந்தக் குரல் பழையபடியும் கேட்டது.

விறகுவெட்டி குனிந்து பார்த்தபோது கீழே என்ன கிடந்தது என்று நினைக்கிறீர் கள்? ஒரு பாம்பு! பாம்பு என்ற தும் உங்களுக்குத் தூக்கிவாரிப் போடுகிறதல்லவா? அப்ப டியேதான் விறகுவெட்டிக் கும் தூக்கிவாரிப் போட்டது. உடனே சமாளித்துக்கொண்டு

கையில் இருந்த கோடரியைத் தூக்கி ஒரு போடு போடப் போனான்.

அப்போது அந்தப் பாம்பு சொல்லும்: "அப்பா விறகு வெட்டி! என்னைக் கொல்வதால் உனக்கு என்ன லாபம்? நான் பசியால் வாடிக் களைத்துப் போயிருக்கிறேன். கண்ணே தெரியவில்லை. நீ ஒரு வாய்க் கஞ்சி ஊற்று வாயோ என்றுதான் உன்னைக் கூப்பிட்டேன்."

அதை உற்றுப் பார்த்த விறகுவெட்டிக்கும் அது சொல்வது வாஸ்தவம் என்று பட்டது. அது மெலிந்து, சுருண்டு, ஓலையைப்போல் கிடந்தது. அந்த விறகு வெட்டிக்கு இரக்கம் வந்து விட்டது. அவனும் எத்தனை நாள் பசியால் கஷ்டப்பட்டிருக்கிறான்? அதைப்போலத் தானே பாம்புக்கும்?

உடனே என்ன செய்தான், அந்தப் பாம்பைச் சுருட்டி முண்டாசுக்குள் வைத்துக் கட்டி, அதை விறகுக் கட்டுக்கு மேல் வைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான். வீட்டுக்கு வந்ததும் பாம்பைத் தோட்டத்தில் இறக்கி விட்டுவிட்டு, உள்ளே வந்து பெண்டாட்டிக்குத் தெரியாமல் கொஞ்சம் பாலைக் கொண்டு வந்து அதற்கு ஊற்றினான். அதைக் குடித்த பாம்பு அவனை வாயார வாழ்த்திற்று.

அப்படியே அந்தப் பாம்பு போயிருந்தால் வம்பே இல்லை. அந்தப் பாம்பும் புறப்படத் தான் தயாராயிருந்தது. ஆனால் அதற்குள்ளாக அந்த விறகு வெட்டியின் மகன் பாபு, 'குடுகுடு' வென்று ஓடி வந்தான். அந்தப் பயலுக்கு மூன்று வயசுதான் இருக்கும். சின்னக் குழந்தையாகையால் பாம்பு என்றால் என்ன என்று தெரியாது. அதனால் விறகு வெட்டி பால் ஊற்றிக்கொண்டிருக்கையில் ஓடி வந்து, "என்னப்பா அது?" என்றான் ஆச்சரியத்துடன்.

அவன் வந்து தடுப்பதற்குள், "நான் இதோடு விளையாடறேன் அப்பா-இது நல்லாயிருக்கு!" என்று 'லபக்' கென்று பாம்பைக் கையில் எடுத்துவிட்டான்.

"அதைப் போட்டுவிடு, கண்ணு, அது கடித்துவிடும்" என்று விறகுவெட்டி எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அந்தப் பயல் கேட்கவில்லை.

"இது கடிக்காது அப்பா, எவ்வளவு நல்லாயிருக்கு!"

என்று பாம்பைத் தூக்கித் தூக்கிக் கீழே போட்டு அந்தப் பயல் விளையாடினுன்.

அந்தச் சமயத்தில் சத்தம் கேட்டு விறகுவெட்டியின் பெண்டாட்டி அங்கே வந்தாள். குழந்தை கையில் பாம்பைப் பார்த்ததும், "ஐயையோ! பாம்போடு விளையாடலாமா?" என்று கத்தினுள்.

விறகுவெட்டி, "நான் இதுக்குப் பால் கொடுத்திருக்கிறேன். இது கடிக்காது" என்று பதில் சொன்னுன்.

அதைக் கேட்ட பெண்டாட்டி, "பாம்புக்குப் பால் வார்த்தாலும் அது விஷத்தைக் கக்கும்னு சொல்வாங்களே! குழந்தையைக் கொல்லவா இதைக் கொண்டு வந்தீங்க?" என்றுள்.

விறகுவெட்டி: சும்மா கத்தாதே! பாம்பு, நல்ல பாம்பு! ஒண்ணும் செய்யாது!

பெண்டாட்டி: இதைக் கொண்டு போய் விடறீங்களா, நான் அம்மிக் குழவியைக் கொண்டு வந்து இதன் தலையில் போடவா?

இதைக் கேட்ட குழந்தை, "ஐயையோ! இதைக் கொல்லாதே அம்மா! நான் இதோடு விளையாடப் போறேன்!" என்று சொல்லிக்கொண்டே பாம்பை எடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டே தோட்டத்துக்குள் ஓடிவிட்டான்.

இப்படியாக அந்தப் பாம்பு விறகுவெட்டியின் வீட்டிலேயே வளர்ந்து வந்தது. எப்போதும் பையன் கூடவே இருக்கும். அவன், "ஆடு" என்றுல் ஆடும். "குட்டிக் கரணம் போடு" என்றுல் போடும். "குடை பிடி" என்றுல் அவனுடைய தலைக்கு மேல் படத்தை விரித்துக் கொண்டு நிற்கும். வர வர விறகுவெட்டியின் பெண்டாட்டிக்குக்கூட அதனிடம் பயம் போய்விட்டது.

இப்படியிருக்கையில் ஒரு நாள் பையனுடன் பாம்பு விளையாடிக்கொண்டிருந்தது. ஒளிந்து விளையாடும் ஆட்டம். பாம்பு ஒளிந்துகொள்ளும்; பையன் ஓடிப்போய்ப் பிடித்து விடுவான். இப்படி எட்டுத் தடவை பாம்பு ஒளிந்துகொண்டது. எட்டுத் தடவையும் பையன் பிடித்துவிட்டான்.

பாம்புக்குச் சந்தோஷம் தாங்க வில்லை. ஓடிப் போய் அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கன்னத்தை உதட்டினுல் கடித்தது. சந்தோஷத்தில்தான்.

தற்செயலாக உள்ளேயிருந்து வந்த விறகுவெட்டியின் பெண்டாட்டி இதைப் பார்த்துவிட்டாள். பாம்பு கடித்துவிட்டது என்று நினைத்துக்கொண்டு, "ஐயையோ! பாம்பு! பிள்ளை போச்சு!" என்று அலறிக்கொண்டு ஓடி வந்தாள். அவள் போட்ட சத்தத்தில் பையன் பயந்து போய்க் கீழே சாய்ந்துவிட்டான். பாம்பும் பயந்து கொண்டு, அங்கிருந்தால் ஆபத்து என்று ஓடி, புதருக்குள் போய் ஒளிந்து கொண்டது.

அவள் போட்ட சத்தத்தில் விறகுவெட்டி ஓடிவந்தான். வந்து பார்த்தால், குழந்தை மூச்சுப் பேச்சில்லாமல் கிடக்கிறது. பாம்பைக் காண வில்லை.

பெண்டாட்டி புருஷனைத் திட்டினுள். "அப்போதே சொன்னேனே! பாமரய்ப் போன பாம்பை நம்பப்படாதுன்னு சொன்னேனே! பிள்ளை போச்சே!" என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினுள்.

விறகுவெட்டி மந்திரவாதியைக் கூட்டிக்கொண்டு வந்தான். அவன் வந்து வேப்பிலையால் மந்திரித்து, மிளகையும் மந்திரித்துக் கொடுத்தான். சற்று நேரத்தில் பையன் கண்ணை விழித்துப் பார்த்தான்.

தாயார் அவனை மடியில் போட்டுக்கொண்டாள். "தலை சுத்துதா? கண் தெரியலியா?" என்றெல்லாம் கேட்டாள்.

பையன், "எனக்கு ஒன்றும் இல்லேம்மா. பாம்பு என்னை ஒன்றும் செய்யலை. நீ கத்தினதைக் கேட்டுத்தான் பயந்து போனேன்" என்றுன். எல்லோரும் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள்.

ஆகையால் பிள்ளைகளே, கெட்டவர்களாக இருந்தாலும் அவர்களிடையே நன்றி மறக்காதவர்களும் இருக்கிறுர்கள் என்பது இதனுல் தெரிகிறது அல்லவா?

சூது வெல்லுமா?

பி. எஸ். ராமையா

காட்சி 1.

[ஜில்லா போலீஸ் சூப்பிரண்டண்டு வில்லியம்ஸும் உதவி சூப்பிரண்டண்டு ஜாக்ஸனும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். ஒரு போலீஸ் ஜவான் வருகிருன்.]

ஜாக்ஸன்: ஸி. ஐ. டி. தாண்டவனை உள்ளே வரச்சொல்லு.

(ஜவான் போகிருன்.)

வில்லியம்ஸ்: ராஜிநாமாக் கடிதத்தில் சின்னக்கண்ணு எழுதியிருந்ததைப் படித்த போதே எனக்குச் சந்தேகம். "வெள்ளைக்கார அதிகாரிகள் செய்வதெல்லாம் அநியாயம். எங்கள் தேச ஜனங்களை அவர்கள் புழு பூச்சிகளாக மதித்து நசுக்குகிருர்கள். ஆகையால் நான் இந்த ராஜாங்கத்தில் சேவகம் செய்ய முடியாது. என் சப் இன்ஸ்பெக்டர் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன்" என்றல்லவா எழுதியிருந்தான்?

ஜாக்ஸன்: அந்த மாதிரி கடிதம் எழுதியதற்கே அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்திருக்க வேண்டும்.

(தாண்டவன் உள்ளே வந்து சலாம் செய்கிருன்.)

வில்லியம்ஸ்: என்ன மேன்! சப் இன்ஸ்பெக்டர் சின்னக் கண்ணுவை எங்கே பார்த்தாய்?

தாண்டவன்: புரட்சி இயக்கத் தலைவர் ராகவன் வீட்டை வேவு பார்க்கும் டூட்டி ஸார் எனக்கு. சின்னக்கண்ணு நேற்று அந்த வீட்டுக்கு வந்து ஒரு மணி நேரம் போல் பேசிவிட்டுப் போனர். ரிப்போர்ட்டு எழுதியிருக்கிறேன்.

வில்லியம்ஸ்: சரி; நீ போ.

(தாண்டவன் போகிருன்.)

வில்லியம்ஸ்: ஜாக்ஸன்! நாம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜாக்ஸன்: அவர்கள் கையாலேயே அவனை ஒழித்துவிட்டால்?

வில்லியம்ஸ்: எப்படி?

ஜாக்ஸன்: சின்னக்கண்ணு போலீஸிலிருந்து ராஜிநாமாச் செய்தது வெறும் வேஷம். புரட்சிக்காரர்களுடன் உறவாடி, அவர்கள் ரகசிய இடங்களை யெல்லாம் உளவறிவதற்காகவே அப்படி நடித்திருக்கிருன் என்று புரட்சிக்காரர்கள் நினைக்கும்படி செய்துவிட்டால்?

வில்லியம்ஸ்: சபாஷ்! அப்படிச் செய்ய முடியுமானல் அவனை அவர்களே பாம்பை அடிப்பதுபோல அடித்துக் கொன்றுவிடுவார்கள். இதை எப்படி நடத்திவைப்பீர்கள்?

ஜாக்ஸன்: நம்முடைய தாண்டவனைக் கொண்டே நடத்திவைக்கிறேன், பாருங்கள்.

வில்லியம்ஸ்: சீக்கிரம் செய்யுங்கள். சின்னக்கண்ணு

வுக்குத் திடீரென்று இப்படித் தேசபக்தி எங்கிருந்து வந்தது?

ஜாக்ஸன்: யாரோ பாரதியாம். தமிழில் பாட்டுக்கள் பாடுகிறானாம். அவன் வெள்ளைக்காரனுக்கும் ஒரு தேசபக்தனுக்கும் தர்க்கம் என்று ஒரு பாட்டு எழுதியிருக்கிறானாம். அந்தப் பாட்டை யாரோ பாடிக் கேட்டானாம். அதிலிருந்து அவன் புத்தி மாறி விட்டதாம்.

வில்லியம்ஸ்: புத்தி மட்டும் மாறவில்லை. விதியே முடிந்து விட்டது. இங்கிலீஷ் அரசாங்கத்தை இந்தியாவிலிருந்து விரட்டவா போகிறார்கள்?

(எழுந்திருக்கிறான்.)

காட்சி 2.

[புரட்சி இயக்கத் தலைவன் ராகவன் வீடு. புரட்சி வீரர்கள் கூடியிருக்கிறார்கள்.]

ராகவன்: ஆத்திரப்படாதீர்கள். ராஜகோபால்! இந்தக் கடிதம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

ராஜகோபால்: பகலில் சின்னக்கண்ணு வீட்டுக்குப் போயிருந்தேன். இன்றிரவு நம்முடைய கூட்டத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு வெளியே வந்தேன். யாரோ ஒருவன் வந்து, "சப் இன்ஸ்பெக்டர் எசமான் இருக்காங்களா?" என்றான். "இருக்கிறார்" என்று சொல்லிவிட்டு மேலே நடக்கப் போனேன். அவன் சந்தேகத்துடன் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே ஒரு கடிதத்தைக் காட்டி, "இதை அவர் கிட்டக் கொடுத்துடுறீங்களா? ஸி. ஐ. டி. சொக்கன் கொடுத்தான்னு சொல்லுங்க. புரிஞ்சுக்குவாரு" என்று சொல்லிக் கொடுத்துவிட்டு ஓடிவிட்டான். எனக்குப் பெரிய சந்தேகமாகிவிட்டது. அதனால் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

எல்லோரும்: (1) அவன் போலீஸ் பாம்பு. (2) நயவஞ்சகன். (3) தலைவரே! எனக்கு உத்தரவு கொடுங்கள். இப்பொழுதே போய், துரோகி சின்னக்கண்ணுவை முடித்து விட்டு வந்துவிடுகிறேன்.

ராகவன்: அவன் உண்மையிலேயே கபட நாடக வேஷதாரிதானா என்று நாம் நிச்சயம் செய்து கொள்ள வேண்டாமா?

ராஜகோபால்: அவனுடைய கபடத்துக்கு இந்தக் கடிதத்தை விட வேறு அத்தாட்சி வேண்டுமா?

(சின்னக்கண்ணு வருகிறான்.)

சின்னக்கண்ணு: யாருடைய கபடத்துக்கு?

ராஜகோபால்: உன்னுடைய நய வஞ்சகக் கபடத்துக்கு.

ஒருவன்: துரோகி!

2: போலீஸ் பாம்பே!

3: உதையடா அவனை!

ராகவன்: பொறுங்கள். எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். (சின்னக்கண்ணுவைப் பார்த்து) மிஸ்டர் சின்னக் கண்ணு! நீங்கள் உங்கள்

போலீஸ் உத்தியோகத்தை உதறி எறிந்துவிட்டு எங்களுடன் வந்து சேர்ந்திருப்பது சத்தியந்தானே!

சின்னக்கண்ணு: பாரத தேவி மீது ஆணையாகச் சத்தியம்.

ராகவன்: இதோ இந்தக் கடிதத்தைப் படியுங்கள்.

சின்னக்கண்ணு: (படிக்கிறான்) மிஸ்டர் சின்னக் கண்ணுவுக்கு, நீங்கள் அனுப்பிய ரிப்போர்ட்டு அரைகுறையாக இருக்கிறதென்று மிஸ்டர் வில்லியம்ஸ் கோபிக்கிறார். புரட்சிக்காரர்கள் எல்லாருடைய பெயர் விலாசங்களையும் உடனே சேகரித்து அனுப்புங்கள். அவர்கள் எல்லாரும் சேர்ந்து கூட்டம் நடத்தும் இடம், நேரம் ஆகியவை பற்றிய தகவல்களைக் கூடிய சீக்கிரம் எதிர்பார்க்கிறேன்.—ஜாக்ஸன்.

சின்னக்கண்ணு: ஹா! சூழ்ச்சி! இதை யார் கொண்டுவந்தது?

ராஜகோபால்: 'ஸி.ஐ.டி. சொக்கன் என்று சொன்னால் தெரியும்' என்றான் அதை என்னிடம் கொடுத்தவன்.

சின்னக்கண்ணு: பொய்! அபாண்டம்! தலைவரே, யாரோ என் விரோதிகள் வேண்டுமென்றே இதைத் தயாரித்திருக்கிறார்கள். நானா இம்மாதிரி வஞ்சக வேலை செய்வேன்? சூழ்ச்சி! பொய்! புரட்டு!

பல குரல்கள்: எது? நீ உத்தியோகத்தை உதறியது பொய். உன் தேச சேவை வேஷம் புரட்டு. தலைவரே! என் தயங்குகிறீர்கள்? உம். உத்தரவு கொடுங்கள். இந்தப் பச்சைப் பாம்பை உடனே கொன்று விடவேண்டும். இல்லாவிடில் நம்முடைய கண்களையே கொத்திக்கொண்டு போய்விடும்.

சின்னக்கண்ணு: சாவுக்கு நான் அஞ்சவில்லை. ஆனால் இப்படி அநியாயப் பழி சுமத்தப்பட்டு, பாதகன் என்ற பெயரோடு சாகவிரும்பவில்லை நான்.

ராகவன்: இதைப் புரட்டு என்று நிரூபிக்க முடியுமா?

சின்னக்கண்ணு: அவகாசம் கொடுங்கள். நிரூபிக்கிறேன்.

குரல்கள்: கூடாது! தப்பிச் செல்லப் பார்க்கிறான்.



ராகவன்: வேறு யாரும் பேசக்கூடாது. சின்னக் கண்ணு! அவகாசம் எப்படிக் கொடுக்க முடியும்? அபாயம் என்று அறிந்த பிறகு எப்படி உம்மை வெளியில் போக அநுமதிக்க முடியும்? (வேறு பக்கம் திரும்பி) இவரை அந்த அறையில் அடைத்து வையுங்கள். இன்றிரவு காட்டில் வழக்கமான இடத்தில் கூட்டம் நடக்கும். அங்கே இவருக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்.

சின்னக்கண்ணு: தலைவரே, நீங்களுமா? அநியாயம்! நான் நிரபராதி!

(அவனைக் கட்டி இழுத்துக் கொண்டு போகிருர்கள்.)

காட்சி 3.

[ஒரு பிள்ளையார் கோவில் வாசல். நாலைந்து பையன்கள் நிற்கிருர்கள். நடுவில் சின்னக்கண்ணுவின் மகன் சிற்றம்பலம்.]

சிற்றம்பலம்: ஐயையோ! எங்கள் தந்தையை அவர்கள் கொன்று போட்டு விடுவார்களே!

ஒருவன்: டேய்! நீ போய்ப் போலீஸில் சொல்லேன். அவர்கள் வந்து காப்பாற்றிவிடுவார்கள்.

சிற்றம்பலம்: போலீஸாரால் அவரைக் காப்பாற்றவே முடியாது. புரட்சிக்காரர்கள் கூடும் இடமே பெரிய ரகசியம்.

2-ஆவது பையன்: அடேய்! யாரோ வருகிருர். கொஞ்சம் பேசாமல் இருங்கள்.

(பாரதி பாடிக்கொண்டு வருகிருர்.)

பாரதி:

கணபதிராயன் அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந்திடவே-விடுதலை
கூடி மகிழ்ந்திடவே

(பாரதி கோவில் முன் நின்று கும்பிடுகிருர். சிற்றம்பலம் பாய்ந்து அவர் காலில் விழுந்து தேம்பிக்கொண்டே சொல்லுகிருன்.)

சிற்றம்பலம்: ஐயா! உங்களைப் பார்த்தால் பெரிய மகான் மாதிரி இருக்கிறது. என் தந்தையைக் காப்பாற்ற உதவி செய்யுங்கள். அவரைப் புரட்சிக்காரர்கள் கொன்றுவிடப் போகிருர்கள்.

பாரதி: என்? அவர் என்ன குற்றம் செய்தார், தம்பி!

சிற்றம்பலம்: அவர் போலீஸில் வேலையாக இருந்து அதை விட்டுவிட்டு வந்தார். அவர் மேல் கட்சிக்காரர்கள் சந்தேகப்படும்படி ஏதோ கடிதம் கிடைத்துவிட்டதாம். அதனால்...

பாரதி: சந்தேகம்! அதற்காகக் கொல்லப் போகிருர்கள்! தூ! கோழைகள்! பயம்... பயம்... பயம். பயத்திலிருந்து பிறக்கிறது சந்தேகம். பயத்தை வளர்க்கிறது. பலி வாங்காமல் அது விடாது......தம்பி! நிமிர்ந்து நில். கண்ணைத் துடைத்துக்கொள், பாண்டியா!

பாதகஞ் செய்பவரைக்
கண்டால்-நாம்
பயங்கொள்ள லாகாது
பாப்பா! [அவர்
மோதி மிதித்துவிடு பாப்பா-
முகத்தில் உமிழ்ந்து

விடு பாப்பா.
துன்பம் நெருங்கி வந்த
போதும்-நாம்
சோர்ந்துவிட லாகாது
பாப்பா,
அன்பு மிகுந்த
தெய்வ முண்டு-துன்பம்
அத்தனையும்
போக்கிவிடும் பாப்பா.
சோம்பல் மிகக்
கெடுதி பாப்பா-தாய்
சொன்ன சொல்லைத்
தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங்குழந்தை
நொண்டி,-நீ
திடங்கொண்டு
போராடு பாப்பா.

பாண்டியா! இந்தப் பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாடு. உனக்கு வழி தானே தெரியும். (போகிறார்.)

ஒரு பையன்: டேய்! அது ஏதோ பைத்தியம் போலே இருக்குடா!

(ஒரு பையன் ஓடி வருகிறான்)

வந்தவன்: டேய்! சிற்றம்பலம்! உன் தந்தை மேல் பழி சுமத்தும் கடிதத்தைக் கொண்டு வந்தவன் ஸி. ஐ. டி. தாண்டவன்தானும். புரட்சிக்காரர்கள் காட்டில் கூடப் போகும் இடத்தைக்கூடக் கண்டுபிடித்துவிட்டேன்.

3-ஆவது பையன்: தேம்பியழுங் குழந்தை நொண்டி-நீ திடங் கொண்டு போராடு பாப்பா.

சிற்றம்பலம்: போராடத் தான் போகிறேன். நீங்கள் எல்லாரும் எனக்கு உதவி செய்ய வேண்டும். முதலில் தாண்டவனை நாம் பிடித்துக் காட்டுக்குக் கொண்டுபோய் விடவேண்டும்.

4-ஆவது பையன்: எப்படியடா முடியும்?

[சிற்றம்பலம் ஒருவன் காதில் ரகசியமாக ஏதோ சொல்லுகிறான்.]

பையன்: நான் முடித்துக் கொண்டு வருகிறேன். கவலைப் படாதே. (ஓடுகிறான்.)

காட்சி 4.

[காடு. நள்ளிரவு. தீவட்டிகள் எரிகின்றன. ராகவன் ஒரு கல்லாசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். கைகால்கள் கட்டப்பட்டு, சின்னக்கண்ணு நிற்கிறான். மற்றவர்கள் அரை வட்ட

மாக அவனை வளைத்துக் கொண்டு நிற்கிறார்கள்.]

ராகவன்: சின்னக்கண்ணு! கடைசித் தடவையாகக் கேட்கிறேன். இதுவரை போலீஸுக்கு என்ன என்ன விவரங்கள் கொடுத்திருக்கிறீர்?

சின்னக்கண்ணு: பாரததேவியின் மேல் ஆணையிட்டுச் சொல்லிவிட்டேன். நான் போலீஸ் உளவாளியல்ல. தேச விடுதலைக்காகப் புரட்சி செய்ய விரும்பி வந்தவன்.

ராகவன்: நம் தாய்நாட்டை அந்நியர் கையிலிருந்து மீட்க நாங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்திருக்கிறோம். அதற்காக எலிகள் போலப் பொறியில் சிக்கி அழிய மாட்டோம். எங்களையெல்லாம் நீர் கூண்டோடு எமன் கையில் சிக்க வைக்கச் சூழ்ச்சி செய்தீர். பலிக்கவில்லை. உமக்குக் கருணை காட்டவே முடியாது. உம், ஆகட்டும்.

[சின்னக்கண்ணுவை நடத்திக் கொண்டு போய் ஒரு மரத்தடியில் நிறுத்துகிறார்கள். மூன்று புரட்சி வீரர்கள் துப்பாக்கிகளை ஏந்திச் சுடுவதற்குச் சித்தமாக எதிரில் நிற்கிறார்கள்.]

ராகவன்: நாங்கள் மூன்று முறை கோஷம் செய்வோம். மூன்றாவது கோஷத்தில் குதிரையைத் தட்டி விட்டுவிடுங்கள். புரட்சி....

எல்லாரும்: ஓங்குக!

ராகவன்: துரோகிகள்...

எல்லாரும்: வீழ்க!

(இருளிலிருந்து குரல் வருகிறது.)

குரல்: பொறுங்கள்..நிறுத்துங்கள். நிஜ வஞ்சகன் அகப்பட்டான். இதோ..

[தாண்டவனைக் கயிற்றினால் கட்டி ஏழெட்டுப் பையன்கள் இழுத்துக் கொண்டு வருகிறார்கள். சிற்றம்பலம் முன்னால் ஓடிவருகிறான்.]

ராகவன்: நீங்களெல்லாம் யார்? இந்த இடம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

சிற்றம்பலம்: நாங்கள் இளைய பாரதத்தினர். இவனைக் கேட்டு உண்மையை உணருங்கள்.

(பையன்கள் தாண்டவனை முன்னால் தள்ளுகிறார்கள்.)

ராஜகோபால்: இவன்தான் அந்தக் கடிதத்தைக் கொடுத்தவன். ஸி. ஐ. டி. சொக்கன்.

சின்னக்கண்ணு: சொக்கனா? இவன் பெயர் தாண்டவன் அல்லவா!

தாண்டவன்: எசமான், என்னைக் காப்பாத்துங்க. பிள்ளை குட்டிக்காரன். பொழைப்புக்காகச் செய்தேன்.

ராகவன்: விவரமாகச் சொல்லு!

தாண்டவன்: சப் இன்ஸ்பெக்டர் எசமான் புரட்சிக் கூட்டத்துலே சேர்ந்துட்டாருண்ணு ரிப்போர்ட்டுக் கொண்டு போனேன். டிபுடி ஐயா ஒரு லெட்டரைக் குடுத்து, 'இதை, சின்னக்கண்ணுவுக்குத் தெரியாமே யாராவது புரட்சிக்காரங்க கிட்டக் கொடுத்திரு'ன்னு உத்தரவு பண்ணி

ணுரு. அவர்மேலே ஒங்களுக்கெல்லாம் பெரிய சந்தேகம் பொறக்கும்படியாச் செய்திடணும்ணுரு.........

ராகவன்: அட பாவி! உன்ஞல் நானும் எவ்வளவு பெரிய அநியாயத்துக்கு இணங்கிவிட்டேன். இந்தக் குழந்தைகள் இவ்வளவு அக்கறையெடுத்து வேலை செய்திராவிட்டால் ஒரு பெரிய தியாகியை அதர்மமாகக் கொன்ற பாவத்துக்கு ஆளாகியிருப்போமே. அவர் கட்டை அவிழ்த்துவிட்டு இவனை அங்கே நிறுத்துங்கள். சின்னக்கண்ணு! நீங்கள் அக்கினிப் பரீட்சை கொடுத்துத் தேறிவிட்டீர்கள்.

[சின்னக்கண்ணு கட்டு அவிழ்க்கப்பட்டு முன்ஞல் வருகிருன்.]

சின்னக்கண்ணு: சிற்றம்பலம்! எப்படி நீங்கள் உண்மையைக் கண்டுபிடித்தீர்கள்?

சிற்றம்பலம்: பாரதி என்று ஒருவர் ஒரு பாட்டுக் கற்றுக் கொடுத்தார். அந்தப் பாட்டைப் பாடியவுடன் தெய்வம் துணைநின்று வழிகாட்டியது. உண்மையைக் காட்டியது. ஊக்கம் கொடுத்தது. இந்தக் கோபு தாண்டவனிடம் போய், புரட்சிக்காரர்கள் கூடும் ரகசிய இடத்தைக் காட்டுவதாகச் சொன்ஞன். அவன் அதை நம்பி ஆவலுடன் வந்தான். நாங்கள் காட்டில் கயிற்றுடன் காத்திருந்து அவனை லபக்கென்று கட்டிக்கொண்டு வந்துவிட்டோம்.

ராகவன்: ஆகா! முள்ளை முள்ளாலேயே எடுத்துவிட்டார்கள்! சின்னக்கண்ணு! இந்த வஞ்சகத் தூதனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். சிறுவர்கள் அதைப் பார்ப்பது உசிதமல்ல. இவர்களை அப்பால் அழைத்துச் செல்லுங்கள்.

சின்னக்கண்ணு: வாருங்கள்.

ஒரு பையன்: கொஞ்சம் இருங்கள். சிற்றம்பலம், பாரதி சொல்லிக் கொடுத்த முதல் அடி என்ன?

பாதகம் செய்
பவரைக் கண்டால்—நாம்
பயம்கொள்ள லாகாது
பாப்பா!
மோதி மிதித்துவிடு
பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு
பாப்பா......

பையன்கள்: தூ... தூ... தூ...

[தாண்டவன் முகத்தைப் பார்த்துத் துப்புகிருர்கள்.]

(திரை)

ஊருக்கு நல்லது

ஊர் முழுவதும் அழுக்கும் அசுத்தமுமின்றி இருந்தால் அனைவருக்கும் நல்லது. அழகும் மகிழ்ச்சியும் நிறைந்த ஊரில் வாழ்வதே நோயின்மைக்கும் சுகத்துக்கும் ஒரு பெரிய சாதனம். ஆகையால் வீட்டைப்போலவே ஊரையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். —ராஜாஜி.

பாராட்டுப் பெற்ற காமிராப் பரிசுக் கதை

தபால்காரன் அபிமன்யு

பி. சீதா
(கண்ணன் கழகம் S. 57)

எங்கள் கிராமத்தில் எனக்கு நினைவு தெரிந்தது முதல் தபால் பட்டுவாடா செய்பவன் அபிமன்யு. அவன் தபால்களைக் கொடுக்கும் சமயத்தில் ஒரு கிராமாதிகாரியாகத் தோன்றுவான். எல்லா வீடுகளிலும் சர்வ சுதந்தரத்துடன் புகுந்து புறப்பட்டு, எல்லாருடனும் நெருங்கிப் பழகும் இயல்பு உடையவன். ஆறு அடி உயரமும் அதற்கு ஏற்ற சரீரமும் அன்பான குரலும் அமைந்தவன்.

பால்யத்தில் மாமரம் ஏறும் போது கால்விரலை ஊன்றி வைக்காததால், வலது கால் சிறிது ஊனமாகிவிட்டது. வெள்ளெழுத்துக் கண்ணாடி அணிந்துகொண்டு தபால் கட்டை ஜீரணமான தோல் பையில் கொண்டு வருவான்.

தெருக்கோடியில் அவனைக் கண்டதும், குழந்தைகள் அவனைச் சூழ்ந்துகொள்ளும். கடிகாரம் வைத்திருப்பவர்கள் எல்லாரும் அவன் குரல் கேட்டதும் சின்ன முள்ளைப் பன்னிரண்டில் திருப்பிவைப்பார்கள்.

ஒருவர் கடிதத்தை வேறொருவர் கையால் தொடவும் அவன் சம்மதிக்க மாட்டான். "படிக்கக் கூடாது!" என்று கண்டித்துவிடுவான். சில வீடுகளில் அவனே கடிதத்தைப் படிக்கவேண்டி வரும். விஷயத்தை வெளியில் சொல்லமாட்டான்.



பொதுவாக, எங்களூர் வாசிகளின் அந்தரங்கம் எல்லாம் அபிமன்யுவின் உள்ளத்தில் பொதிந்து கிடக்கும். ஆனால் அவைகளை வெளியில் விடமாட்டான்.

மணியார்டருக்குக் குறைந்தபக்ஷம் ஓர் அணா மாமூல். அவனுக்குக் கொடுப்பதற்கு ஒருவரும் தயங்குவதில்லை. ஊரில் கட்சிப் பிரதிகட்சி இருந்தாலும், அபிமன்யுவிடம் எல்லாருக்குமே அபிமானம் தான். குழந்தைகள் முதல், பெரியவர்கள்வரை, கிராமத்து நாய்கள் உள்பட, அவனிடத்தில் அலாதி அன்பு வைத்திருந்தார்கள்.

அபிமன்யுவுக்கு இந்த நாய்களிடம் எல்லை கடந்த பிரியம். ஏனென்றால், அவனுக்கு வரவேற்பு அளிப்பதில் எல்லா நாய்களுக்கும் மிகுந்த உற்சாகம். ஆனால் ஒரு நாய் மட்டும் அபிமன்யுவை விடாமல் தொடர்ந்து, அவன் தபால் கட்டைக் காக்கும். அதன் பெயர் 'போச்'. அதற்கு முறுக்கோ தேங்காய்க்கீற்றோ, வேறு ஏதாவது தின்பண்டமோ கொடுக்காமல் கிராமத்தைத் தாண்டமாட்டான் அவன்.

சில சமயங்களில், கடிதத்தை அதன் வாயில் தந்து, விலாசதாரின் வீட்டைச் சுட்டிக் காட்டி, அவர்கள் பெயரையும் சொல்லிவிட்டால், போச் அந்தக் கடிதத்தைப் பத்திரமாய்க் கொண்டுபோய், பட்டுவாடா செய்துவிட்டு, திரும்பிவந்து அவனிடம் வாலை ஆட்டும்.

"சிங்கமடா, நீ! தபால்காரனாய்ப் பிறந்திருக்க வேண்டியவன், தப்பிப்போய் நாய் ஜன்மம் எடுத்துவிட்டாய். உனக்கு அடுத்தது, மனித ஜன்மம்தான்!" என்று சொல்லி, அதனிடம் கொஞ்சி, தட்டிக் கொடுத்துச் சந்தோஷப்படுத்துவான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அபிமன்யு, வழக்கமான தட்டாடையும், அரைக்கைச் சட்டையும், நீலலேஞ்சி முண்டாசும் இல்லாமல், காக்கிச் சராயும், தலைப்பாகையும் அணிந்து பட்டை நாமத்துடன் காட்சியளித்தான்.

"இதென்ன பகல் வேஷம்? உனக்கு என்னப்பா திடீர் வாழ்வு? ஏகத் தடபுடலாய் மாப்பிள்ளைக் கோலம் பூண்டு விட்டாயே; இரண்டாவது கல்யாணமோ?" என்று எல்லாரும் பலவிதமாய், சரமாரியாய் விசாரணை செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

"இல்லீங்க, இன்ஸ்பெக்டர் எஜமான் வந்திருக்காங்க. சீக்கிரமாய்த் தபால் பட்டுவாடா செய்து, கணக்கு ஒப்பிக்க வேண்டும். எஜமான் வந்த சமயத்திலேதான் இந்த உடுப்புகள் பெட்டியிலிருந்து வெளிக் கிளம்பும். நான் அவசரமாகப் போகவேணும், வரேனுங்க" என்று சொல்லிக் கொண்டே, 'போச்' பின் தொடர, தெருவுக்குள் நுழைந்தான்.

"அம்மா, மணியார்டர் வந்திருக்கிறது. கொஞ்சம் தாகத்துக்கு மோர் கொடுங்க" என்ற வண்ணம், சிவகாமு வீட்டின் கதவைத் தட்டினுன் அபிமன்யு.

கதவு திறந்ததும், தோல் பையைத் திண்ணையில் வைத்து, "போச்சு, பையைப் பத்திரமாய்ப் பார்த்துக்கோ!" என்று தாக்கீது விடுத்துவிட்டு, வீட்டுக்குள் சென்றுன்.

போச்சும் நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு. தோல்பையின் எதிரே, கண் கொட்டாமல் பார்த்தபடி படுத்து விட்டது.

சிவகாமுவின் புருஷன் பம்பாயிலிருந்து அனுப்பிய ரூபாய் ஐம்பதையும் கொடுத்துவிட்டு, நாலணு அன்பளிப்பையும் பெற்று, ஈயச் செம்பில் வைத்திருந்த மோரைப் பருகினுன். தாகமும் தீர்ந்தது.

சிவகாமுவிடம் விடை பெற்றுத் திண்ணைப் பக்கம் திரும்பியபோது, அபிமன்யு திகிலடைந்து, திடுக்கிட்டுப் போனுன். தபால் பையைக் காணவில்லை. அதற்குக் காவல் வைத்திருந்த போச்சையும் அங்கே காணவில்லை. மேலே என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. பலவிதமான சந்தேகங்கள் அபிமன்யுவின் மனத்தில் உதித்தன.

'இது ஒருவேளை இன்ஸ்பெக்டரின் சோதனையாக இருக்குமோ? யாராவது விளையாட்டாக ஒளித்து வைத்து விட்டார்களோ? அல்லது மணியார்டர் அதிகமாய் வந்திருப்பதைத் தெரிந்து கொண்ட விஷமிகள் யாரேனும் பையை அபேஸ் செய்து விட்டார்களோ? என்ன செய்வது? எங்கே தேடுவது? யாரைக் கேட்பது? ஒரு மணிக்குள் தபாலாபீசுக்குப் போய் ஆஜராகா விட்டால் உத்தியோகத்துக்கே பங்கம் வந்துவிடுமே' என்ற

எண்ணங்கள் அபிமன்யுவைக் குழப்பிவிட்டன.

அவன் உடல் முழுவதும் நடுங்கிற்று; தலேயோடு கால் வேர்த்துவிட்டது. திருதிரு வென்று விழித்தான். கண்கள் சுழன்றன. வெளியில் சொல்லிக்கொள்ள வெட்கம். இந்த அவக்கேடு வந்ததனுல் நெஞ்சடைத்து வருகிறது துக்கம். தபால் பை கைக்கு வந்து சேர்ந்தால், அம்மனுக்கு அபிஷேகம் செய்து வைப்பதாகச் சொல்லி வேண்டிக் கொண்டான்.

ஏதோ ஒரு வைராக்கியம் கொண்டவன் போல், தெருவின் தெற்குக் கோடிக்கு வெறி பிடித்து ஓடினுன். அபிமன்யுவின் அலங்கோலம் எல்லோருக்கும் விந்தையாக இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தான்.

போச்சைக் கண்டு பிடித்தால், பையும் அகப்பட்டுவிடும் என்ற முடிவுக்கு வந்தான். தோலேக் கடிப்பதற்காகவே போச்சு, பையைக் கவ்விப் போய்விட்டதோ என்று எண்ணினுன்.

"எவ்வளவு கண்ணியமாய்ப் போற்றி வளர்த்தாலும் நாய்க்கு நாயின் புத்திதானே வரும்!" என்று முணுமுணுத்துக் கொண்டே, கையில் அரைச் செங்கல் ஒன்றை எடுத்துக்கொண்டான்.

கீழ்ப்புறத்திலுள்ள தென்னந்தோப்புக்குள் புகுந்தான். காற்றில் இலை ஓசையில் இவன் காதுக்கு ஒன்றும் கேட்கவில்லை. தோப்பின் மத்தியில் கிணற்றங் கரையில் ஏதோ வெள்ளை நிறத்தில் ஒன்று அபிமன்யு கண்ணில் பட்டது. நெருங்க நெருங்க, ஒரு நாயின் உருவம் தென்பட்டது. அதன் பின்பக்கந் தான் தெரிந்தது. ஆனால் அதன் வால் ஆடுவதிலிருந்து அந்த நாய் போச்சுதான் என்று தீர்மானித்தான்.

இன்னும் கொஞ்சம் அருகில் சென்றதும், அது தன் வாயினால் ஒரு தோல் பையை இழுக்க முடியாமல் இழுப்பதைப் பார்த்தான். இதைப் பார்த்ததும் அபிமன்யுவுக்கு போச்சின் மேல் இருந்த சந்தேகம் உறுதியாகிவிட்டது. தின்பதற்குத்தான் கடித்து இழுத்திருக்கிறது என்று தீர்மானித்தான்.

கோபமுகத்துடன் கூடிய இன்ஸ்பெக்டர், பரிகசிக்கும் கிராமவாசிகள், கையைப் பிசைந்து நிற்கும் போஸ்டு மாஸ்டர், கண்ணீர் விடும் தன் பெண்சாதியின் காட்சி - இவை அவன் மனக் கண்முன் தாண்டவமாடின.

வெறி மேலிட்டு, அரைக் கல்லைக் குறிபார்த்து, போச்சின் தலையை நோக்கி வீசி எறிய போனான். அதற்குள் கத்தலுடன் போச்சு வாயைப் பிளந்துவிட்டது. வாயில் பை தொங்கிற்று. உதிரம் ஒழுக மல்லாந்துவிட்டது.

அதே சமயத்தில், ஏதோ ஒரு பெரிய கறுப்புநாய் வாயில் தோல் துண்டுடன் குலைத்துக் கொண்டே, போச்சைக் கீழே வீழ்த்திவிட்டு மறுபக்கம் கம்பி நீட்டியது.

அபிமன்யுவின் மனம் இன்னும் குழம்பிவிட்டது. போச்சின் கழுத்தெல்லாம் ரத்தக் காயம் தென்பட்டது. "இவ்வளவு கடியையும் பொறுத்துக் கொண்டு, என் தபால் பையை அந்தக் கறுப்பன் வாயிலிருந்து பிடுங்கி வந்திருக்கிறாயே! கொஞ்சம் முன்னதாக வராமல் போனேனே! கடவுளே!" என்று பலவாறு தன்னை நொந்துகொண்டு போச்சின் உடலை அடக்கம் செய்தான்.

அது உயிர் நீத்தது ஒரு புதன்கிழமை. புதன்கிழமை தோறும் தபால் பட்டுவாடா செய்ததும் போச்சைப் புதைத்த இடத்தில் முளைத்திருக்கும் மாஞ்செடிக்குத் தண்ணீர் ஊற்றுவான். அப்போது அவனையும் அறியாமல் கண்களில் நீர் வடியும்.

பவழவல்லி

கி. ரா.

எதிரில் பயங்கரமாகக் கையை விரித்துக்கொண்டு வரும் பூதத்தைக் கண்ட சுந்தரத்துக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. அப்படியே செடியின் மறைவில் பதுங்கித் தரையில் படுத்துக்கொண்டு செத்தாற்போல் கிடந்தான். வேகமாக வந்த பூத மனிதன் கீழே குனிந்து பார்க்காமல் உறுமிக்கொண்டே அவன் கிடந்த இடத்தைக் கடந்து போய்விட்டான். அவன் சென்ற பிறகு சுந்தரம் தரையோடு தரையாய்த் தத்திப் போய் 'வெடுக்'கென்று பறந்து போய்விட்டான்.

அங்கிருந்து வெகு நேரம் பறந்தான். பால்போல் நிலவு காய்ந்துகொண்டிருந்தது. அந்த நிலா வெளிச்சத்தில் காற்றில் மிதப்பதைப் போல் பறந்து செல்வது ஆனந்தமாய் இருந்தது. எப்போதும் கிளியாய் இருந்தால் என்ன? மனிதனுக்கு ஏன் கடவுள் பறக்கும் சக்தியைக் கொடுக்கக் கூடாது?

இப்படியெல்லாம் அவன் எண்ணமிட்டுக் கொண்டு பறந்து சென்றபொழுது அவனுடைய காதில் இனிமையான ஒரு பாட்டுக் குரல் கேட்டது. கீழே குனிந்து பார்த்தான். என்ன ஆச்சரியம்! கீழே பத்துப் பெண்கள், மச்சப் பெண்கள், ஆடிக்கொண்டிருந்தார்கள். உடனே கீழே இறங்கி ஒரு செடியின் மேல் போய் உட்கார்ந்தான். அங்கிருந்து அவர்கள் ஆடுவதும் பாடுவதும் நன்றாய்த் தெரிந்தது.

அப்போது அந்தக் கூட்டத்தில் சேராமல் ஒரு பெண் மட்டும் தனியாய் ஒரு பாறையின் மேல் சாய்ந்துகொண்டு யோசனையில் மூழ்கியவளைப் போல் நின்றாள். அவளைத் திரும்பிப் பார்த்தவுடனே அவள் யார் என்பதை அவன் தெரிந்துகொண்டுவிட்டான். அவள்தான் பவழவல்லி! வேறு யார்! அன்று பௌர்ணமியல்லவா! சாபம் நீங்கி உயிருடன் வந்திருக்கிறாள்.

அவளைப் பார்த்ததும் சுந்தரத்துக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. பறந்துபோய் அவளுக்கு எதிரில் ஒரு செடியின் மேல் உட்கார்ந்தான். அப்போது கூட்டத்திலிருந்து ஒரு பெண் வந்து பவழவல்லியையும் ஆட வரும்படி கூப்பிட்டாள்.

“அடியே! பவழவல்லி! நீயும் ஆடலாம் வா! எப்போதும் இப்படித் துக்கம் காப்பது சரியல்ல” என்றாள் அந்தப் பெண்.

"எனக்கு விளையாட மனம் இல்லை! என்னுடைய கதிதான் இப்படி ஆகிவிட்டது. எனக்காக ஒருவர் வந்து பதக்கத்தை எடுத்து வரப் போனார். அவரையும் காணவில்லை. அவர் என்ன ஆனாரோ என்று எனக்கு எப்போதும் கவலையாயிருக்கிறது" என்றாள் பவழவல்லி.

இதைக் கேட்ட சுந்தரத்துக்குத் தான் வந்துவிட்டதாகச் சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று. ஆனால் எப்படிப் பேசுவது? அவன் கிளியாக அல்லவோ இருக்கிறான்?

அப்படியே பறந்து போய் அவளுடைய தோளின் மேல் உட்கார்ந்தான். கிளிப் பாஷையில் 'கீச்சு கீச்சு' என்றான். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அந்தக் கிளியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டாள். அன்புடன் அவனைத் தடவிக் கொடுத்தாள்.

அப்போது ஒரு பெண் ஓடி வந்து, "பவழவல்லி! மகாராஜா

உன்னைப் பார்க்க வருகிறார்" என்று சொன்னாள்.

உடனே எல்லாப் பெண்களும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு விலகி நின்றார்கள். பவழவல்லியும் தன் ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு தன் தகப்பனாரை எதிர்கொண்டு அழைக்கச் சென்றாள். சுந்தரம் சமயம் பார்த்து நழுவி அங்கிருந்து பறந்தான். ராஜா வரும் சமயத்தில் அவன் அங்கு இருந்தால் என்ன நடக்குமோ என்று பயம் அவனுக்கு.

பவழவல்லியும் பெண்களும் அங்கிருந்து போய்விட்டார்கள். அவன் எங்கே போவது? ஒன்றும் தெரியாது அவன் விழித்துக்கொண்டிருக்கையில் அவனுடைய பெயரைச் சொல்லி யாரோ "சுந்தரம்!" என்று கூப்பிட்ட குரல் கேட்டது.

கீழே குனிந்து பார்த்தான். அவனுடைய பழைய நண்பனான தங்க ஆமை நின்றுகொண்டிருந்தது.

"சுந்தரம்! உன்னை எங்கேயெல்லாம் போய்த் தேடுகிறது! நீ கிளியாய் மாறிவிட்டாய் என்று கேள்விப்பட்டு மாயாஜால மந்திரவாதியின் சிறைக்குள் போய்த் தேடினேன். அப்புறம் சஞ்சலாதான் நீ தப்பியோடிவிட்டாய் என்று சொன்னாள். அங்கிருந்து நடந்துவருகிறேன். உன்னால் என் கால் வீங்கிவிட்டது" என்றது ஆமை.

சுந்தரத்துக்கு ஆச்சரியமாயிருந்தது. இந்த ஆமை பொல்லாத ஆமையாயிருக்கிறதே? இவ்வளவு சாமர்த்தியம் உள்ள ஆமையால் என் பவழவல்லி

யைக் காப்பாற்ற முடியவில்லே? இதை யெல்லாம் அவனுக்குக் கேட்க வேண்டும் என்று தோன்றிற்று. ஆனல் பேசத் தான் வாய் இல்லேயே? அதனல் பேசாமல் நின்முன்.

அவனுடைய கஷ்டத்தை அறிந்தது போல் ஆமை, "சும்மா கிளிப் பாஷையிலேயே பேசு. எனக்கு எல்லாப் பாஷை யும் தெரியும்!" என்றது.

சுந்தரம் 'கீச்சு கீச்' சென்று கிளிப் பாஷையிலேயே, "உன்னுடைய பேச்சைக் கேட்காமல் இப்படி அகப்பட்டுக் கொண்டேன். எனக்காக நீ இப்படிக் கஷ்டப்பட்டதற்கு மன்னித்துவிடு" என்முன்.

ஆமை, "அப்படியானல் இனி மேலாவது நான் சொல்வதைக் கேட்கிருயா?" என்றது.

"கட்டாயமாய்க் கேட் கிறேன்!"

"அப்படியானல் என்னைக் கொன்றுவிடு!"

இதைக் கேட்டதும் சுந்தரத் துக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதை எப்படிக் கொல்வது?

"அதைத் தவிர நான் வேறு எது வேண்டுமானலும் செய் கிறேன்" என்முன் அவன்.

"என்னைக் கொல்வதனல் உனக்கு நன்மை உண்டாகும். பவழவல்லிக்கு நன்மை உண்டாகும். ஏன் செய்ய மாட்டேன் என்கிருய்?"

"இதோ பார்! ஒரு ஈ எறும் பைக்கூட நான் கொன்றதில்லே. அதுவும் உன்னே, எனக்கு இவ் வளவு உபகாரம் செய்த உன்னே, நான் கொல்லமாட்டேன். வேறு ஒரு வழியும் கிடை யாதா?"



"வழி இருக்கிறது. ஆனல் நீ சரியாகச் செய்யவேண்டுமே?"

"நான் இந்தத் தடவை சரி யாகச் செய்கிறேன். முதலில் என்னே மனித உருவாக்க ஒரு வழி சொல்லு!"

"அப்படியானல் நான் சொல் கிறபடி செய்!" என்று ஆரம் பித்தது ஆமை.

"இங்கிருநது நேராக வடக்கே விடியும் வரையில் பறந்து போனயானல் ஒரு சின்னத் தாமரைக்குளம் இருக் கிறது. அந்தக் குளத்தை விடி வதற்குள் நீ அடையவேண்டும். சரியாகச் சந்திரனுடைய நிலா அந்த ஜலத்தில் பட்டுக்கொண் டிருக்கும் போது நீ அதற்குள் மூழ்கி எழுந்திருந்தாயானல் சுய உருவத்தை அடைந்துவிடு வாய். கொஞ்சம் தாமதமான லும் பலிக்காது."

"சரி; இப்போதே போ கிறேன். ஆனல் அங்கிருந்து அல்லிக்குளத்துக்கு எப்படிப் போகிறது?" என்முன் சுந்தரம் ஆவலுடன்.

"அங்கிருந்து அல்லிக்குளத் துக்குப் போனலும், ஒரு தடவை அன்னப் பறவையைப் பிடித்தவர்கள் மறுபடியும் பிடிக்க முடியாது. வேறு வழியில்தான் பதக்கத்தைக் கொண்டுவரவேண்டும்" என் றது ஆமை.

சுந்தரம் "எப்படி?" என்று கேட்க, ஆமை சொல்லியது: "தாமரைக் குளத்திலிருந்து கிழக்கு நோக்கிக் கொஞ்ச தூரம்போனல் அங்கே ஒரு மலே

ாசற்படி தெரியும். அதன் மல் ஒரு பதுமை இருக்கிறது. அந்தப் பதுமை கேட்கும் கேள்விக்கு நீ சரியான பதில் சொல்லிவிட்டால் அந்த வாசற்படி தானே திறக்கும்.

"அதன் வழியே உள்ளே போனால் அங்கே ஒரு கல் தூணில் ஒரு நீர்யானை சங்கிலியால் கட்டப்பட்டிருக்கும். அந்தச் சங்கிலி சாதாரணச் சங்கிலியல்ல; மந்திர சக்தி கொண்டது. அந்தத் தூணில் இரண்டு கொப்பிகள் இருக்கும். ஒன்று தங்கத்தினால் ஆனது. மற்றொன்று வெள்ளியினால் ஆனது. தங்கக் கொப்பியை யானையின் வலது தந்தத்தில் மாட்ட வேண்டியது. வெள்ளிக் கொப்பியை இடது பக்கம் மாட்ட வேண்டியது. உடனே யானை விடுதலையடைந்து நீ சொன்னதையெல்லாம் கேட்கும். அதன் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு அல்லிக் குளத்துக்குப் போகலாம். அதற்குள் மூழ்கிப் பவழவல்லியின் பதக்கத்தை எடுத்துவிடலாம்."

"அந்த மலைவாசல் பதுமை என்ன கேள்வி கேட்கும்?"

"அது யாருக்கும் தெரியாது. உன் சாமர்த்தியத்தினால்தான் பதில் சொல்ல வேண்டும். உள்ளே போனதும் அந்த யானையின் கொப்பிகளை மட்டும் மாற்றிவிடாதே! நினைவு இருக்கிறதா?" என்று கேட்டது ஆமை.

"நன்றாக நினைவு இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் பறக்கத் தொடங்கினான் சுந்தரம்.

(தொடரும்)

ரெயில் எஞ்சின்





தேவையானவைகள்: பால் டின் ஒன்று; நூல் கண்டு ஐந்து; ஓர் அடி நீளமுள்ள கனமான அட்டை அல்லது பிளைவுட் (அகலம் 5 அங்குலம் இருந்தால் போதும்); படத்தில் காட்டியிருப்பது போல் மூடியுள்ள அட்டைப்பெட்டி; 12 சின்ன ஆணிகள்; கொஞ்சம் பசை; கறுப்புக் காகிதம்.

படத்திலேயே பாகங்களைத் தனித்தனியாகப் பார்க்கலாம். பால் டின் முன்பாகமாகவும், பிளைவுட் அடிப்பாகமாகவும் பயன்படும். டிரைவர் நிற்கும் இடமும் கரி போடும் இடமுமாக அட்டைப் பெட்டியைப் பொருத்தவேண்டும். நூல்கண்டு புகைபோக்கி. சக்கரங்களாக நூல்கண்டின் இரண்டு பக்கங்களையோ அல்லது அட்டைகளையோ பொருத்திவிடவேண்டும் பிறகு மேல்புறம் கறுப்புக் காகிதத்தை ஒட்டிவிடுங்கள். அவ்வளவுதான்; அழகான எஞ்சின். நீங்களே செய்த எஞ்சின்!

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(C) 47. சின்னி, N., ஆலப்புழை. 48. சின்னையன், B.M., ஓடத்துறை. 49. சென்னகேசவன், R. திருத்தங்கல். 50. சிதம்பரம், L., தஞ்சாவூர். 51. சிதம்பரம், C., மதுரை. 52. சிதம்பரம், R., நீர்க்கொழும்பு. 53. செல்லப்பன், S., சூலூர். 54. சிதம்பரசாமி, K., மேல்கரைப்பட்டி.

(D) 22. டெல்போஸ், A. S., மிஸ் மில்லீன், அனுராதபுரம், சிலோன். 23. தண்டபாணி, K., வாணியம்பாளையம். 24. தண்டாயுதம், A V., ஆத்தூர். 25 தண்டாயுதம், P.V., கோயம்புத்தூர். 26. தண்டபாணி, M., சி. செம்மாண்டபாளையம். 27. தண்டபாணி, P., வளவனூர். 28. தக்ஷிணாமூர்த்தி, S., திருவாரியபுரம். 29. தனலக்ஷ்மி, M., சென்னை-10. 30. தனராஜ், G.M., சிந்தாதிரிப்பேட்டை. 31. தனுஷ்கோடி, R., புதூர். 32. தர்மராஜன், K., முனுசாமி, M., விருதுநகர். 33. தர்மராஜன், D., காங்கயம். 34. தாமோதரன், E., துளசிபாய், E., பெத்தநாயக்கன் பாளையம். 35. தாமோதரன், S., ஆனைக்கொட்டலம். 36. தாமோதரசாமி, S., பாப்பாநாயக்கன் பாளையம். 37. தெய்வசிகாமணி, A., (ஊர் எழுதவில்லை). 38. தேவநாதன், R., டில்லி. 39. தேவி, G. D., வேப்பேரி. 40. தேவராஜ், P., கோயம்புத்தூர். 41. தேவராஜ், I. K., இடைக்கரை. 42. தேவராஜ், G., கூனூர். 43. துரைராஜா, M., திருப்பத்தூர். 44. துரைராஜா, T., அதிராம்பட்டணம். 45. துரைராஜு, P. M., பெங்களூர். 46. துரைசாமி, K., (ஊர் எழுதவில்லை.) 47. துரை, M., அடையாறு. 48. துரைசாமி, A. K., சிந்தாதிரிப்பேட்டை. 49. துரைசாமி, C., போளூர். 50. திரவியம், T. V., மயிலாப்பூர்.

(E) 2. இசக்கிமுத்து, சென்னை-7. 3 இசக்கிமுத்து, பாபநாசம். 4. இசக்கி, M., சங்கரன்கோயில். 5. ஈசுவரமூர்த்தி, செந்திலானுகம், கணபதி, E. K. S., சாத்தன்குளம். 6. ஈசுவரிதேவி, C., வெள்ளவத்தை. 7. எஸ்தர் ராணி, P., தென்னூர். 8. எட்வர்டு தம்பநாயகம், S. S., சாத்தன்குளம். 9. ஏகாம்பரம், N., திருவண்ணாமலை. 10. எமானுவல், R., தஞ்சாவூர். 11. இப்ராஹிம், S.A M., மேட்டுப்பாளையம்.

(F) 1. பஸுலுதீன், S. B., பென்னாகரம், 2. பரூக், M. S. A., கொழும்பு. 3. போஜியாள்

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

செப்டம்பர் '50 கூபன் நெ.

பெர்னான்டோ, மெஜோரி கோரிஸ். ரத்தினபுரி, சிலோன்.

(G) 30. கிரிஜா, C., ராதா, மயிலாப்பூர். 31. கங்காதரன், T., எழும்பூர். 32. கணபதி சுப்பிரமணியன், துறையூர். 33. காந்தி, கற்பகம், விஜயலக்ஷ்மி, V. N., மயிலாப்பூர். 34. கஜேந்திரன், ஆதிகேசவன், K. C., சென்னை - 1. 35. கணபதி, S., கல்கத்தா. 36. கணபதி, A. S., கொழும்பு. 37. கபூர், M. A., அனுராதபுரம். 38. கபூர, P A., வழுதூர். 39. கதாதரன், கங்காதரன், S., ஆலங்குடி. 40. கங்காபாய், ஜகந்நாததேவ், சென்னை - P.T. 41. கஜலக்ஷ்மி, சென்னை - 1. 42. கணேசன், N., தெப்பக்குளம், திருச்சி. 43. கணேசன், R., உடையார்பாளையம். 44. கணேச சர்மா, S., திரிகோணமலை. 45. கணேசன், லலிதா, ராஜேசுவரி, T. V., முசிறி. 46. கணேசன், V., விழுப்புரம். 47. கணேசன், V., பூதடபாண்டி. 48. கணேசபிள்ளை, செல்வநாதன், G., மந்தூர். 49. ஞானசம்பந்தன், M., சென்னை -17. 50. ஞானசேகர், R., திருவண்ணாமலை. 51. கீதா, சேதுராமன், R., வித்யாநகர். 52. ஞானஸ்கந்தன், S., மன்னார்குடி. 53. கீதா, பெங்களூர் கண்டோன்மெண்ட். 54. கீதா, கல்யாண், V., சென்னை-4. 55. கோதாவரிபாய், நாராயணராவ், சேதுபாய், T. N., சைதாப்பேட்டை. 56. கோகுலநாதன், P., மறவனேரி. 57. கோமதி, K. N., மண்டபம் காம்ப். 58. கூப்சேட், S., கூனூர். 59. கோபு, L., கோயம்புத்தூர். 60. கோபாலன், V. R., திருக்கோயிலூர். 61. கோபால், V., சென்னை -6. 62. கோபால்பட், B., புதுக்கோட்டை. 63. கோபாலன் S.K., சிறுவயலூர். 64. கோபாலன், S., ஜீயபுரம். 65. கோபால் S., சொக்கநாதன்கோயில். 66. கோபாலன், S. S., பெரம்பூர். 67. கோபால கிருஷ்ணன், T. K., அடையாறு. 68. கோபாலகிருஷ்ணன், G, பேராவூரணி. 69. கோபாலகிருஷ்ணன், A. V., சௌகார்பேட்டை. 70. கோபாலகிருஷ்ணன், V., ராயப்பேட்டை. 71. கோபாலகிருஷ்ணன், T. S., சொக்கநாதன்கோயில். 72. கோவிந்தராஜன், K., குமாரபாளையம். 73. கோபாலகிருஷ்ணன், C., மயிலாப்பூர். 74. கோபாலநாதன், N., யாழ்ப்பாணம். 75. கோவிந்தராஜு, S A, ஸ்ரீ வைகுண்டம். 76. கோவிந்தராஜுலு, M.A., சின்னமொடச்சூர். 77. கோவிந்தம்மாள், S M., சங்கிரி. 78. கோவிந்தராவ், L., கூனூர். 79. கோவிந்தசாமி, R, திருகள்ளாறு. 80. கோவிந்தசாமி, K., சுந்தரப்பெருமாள்கோயில். 81. கோவிந்தராஜ், R., திருவள்ளூர். 82. கோவிந்தராஜன், K., (ஊர் எழுதவில்லை).

★★★★★★★★★★ ★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★ ★★★★★

83. கோவிந்தன், T.V., மதுராந்தகம். 84. குருசாமி, S.M., சரோஜா, தரணி, சென்னை-1. 85. குருசாமி, M.S., அடையாறு. 86. குருசாமி, M.S., பாளையங்கோட்டை. 87. குருசாமி V., ஆண்டிப்பட்டி. 88. குருசாமி, D., கொசப்பேட்டை, வேலூர். 89. குருசாமி,R.,திருக்கோகர்ணம். 90. குருசாமி, K., சென்னை - 5. 91. குருமூர்த்தி, J., சாமிநாதன், கும்பகோணம். 92. குகானந்த சர்மா, K.C.S., யாழ்ப்பாணம். 93. குரு, R., சென்னை-8. 94. ஞானபண்டிதன்,S.R., சென்னை-1. 95. கஜேந்திரராவ், S., சென்னை-2. 96. கோபாலகிருஷ்ணன், S., சென்னை-6.

(H) 10. ஹரி, K., காஞ்சீபுரம். 11. ஹரிஹரன், E.S., திருவல்லிக்கேணி. 12. ஹேமாவதி, லக்ஷ்மி நாராயணன், B., புது டில்லி. 13. ஹுஸேன் அலி, A.S., (ஊர் எழுதவில்லை). 14. ஹேமாவதி, S. சென்னை-4. 15. ஹேமா, V., சென்னை - 17. 16. ஹரிஹரன், S., அல்சூர், பெங்களூர். 17. ஹேமா பாய், J., சென்னை-2. 18. ஹம்சா, சித்ரா, தாம்பரம்.

(I) 5. இந்திரா, S., ராகவன், S. S., மதுரை. 6. இளவழகன், M. C., கொண்டித்தோப்பு, 7. இந்திரா, R., விசாலாக்ஷி, திருவனந்தபுரம். 8. இஸ்மாயில் M., குருநாகல். 9. இளைஞர் முன்னேற்றச் சங்கம், தாரபுரம். 10. இப்ராஹிம், O. M., எருவாடி. 11. இந்திரா, ஸ்ரீநிவாசராகவன், T. N., தாம்பரம். 12. இளமுருகனார், S., தும்பனை. 13. இந்திரா, C., ஆனந்த், ஸ்ரீபதி, சென்னை-14. 14. இட்ருஸ், M.M., சென்னை-5. 15. இந்திரா, சந்திரா, G., அடையாறு.

(J.) 28. ஜயராமன், G., ஸ்ரீதரன், R., தாம்பரம். 29. ஜப்பார், M. N. ஆனந்த், பத்மா, ஸிம்லா-4. 31. ஜம்பகலக்ஷ்மி, S., கள்ளக்குறிச்சி. 32. ஜம்பகலக்ஷ்மி, வசந்தா, பிரேமா, வாசன், திருப்பாதிரிப்புலியூர். 33. ஜகதீசுவரன், சத்திய நாராயணன், V. P., பெங்களூர்-5. 34. ஜகந்நாதன், C., புங்குவாயா. 35. ஜகந்நாதன், C., வில்லிவாக்கம். 36. ஜக்கிரியா, ஸைபுதீன், ஜின்னு, திண்டுக்கல். 37. ஜலஜா, P., புது டில்லி. 38. ஜனார்த்தனம், R., சென்னை-4. 39. ஜானகிராமன், T., சோளிங்கபுரம். 40. ஜனார்த்தனன், M., கெமாஸ். 41. ஜானகி, விஜயலக்ஷ்மி, M. V., சென்னை-4. 42. ஜானகி, இந்திரா, S., மலேயா. 43. ஜான்ஸி தேவி, K., மதுரை. 44. ஜயசந்திரன், J., வாசன், ஜயமணி, சென்னை-1. 45. ஜயசந்திரன், பாலதிலகர், சேந்தமங்கலம். 46. ஜயலக்ஷ்மி, R., சீர்காழி. 47. ஜயலக்ஷ்மி, P. S., பெரியகுளம். 48. ஜயலக்ஷ்மி, P., சீனிவாசன், S. V. S., சென்னை - 4. 49. ஜயராமன், N., புது டில்லி. 50. ஜயராமன், ஜானகி, ராமநாதபுரம். 51. ஜயராமன், P., மேலமருத்துவக்குடி. 52. ஜயராமன், K., மதுரை. 53. ஜயராமன், ராஜாராமன், T. D., திருவண்ணாமலை. 54. ஜயராஜ், M., கோயம்புத்தூர். 55. ஜயகுமார், R , புதுடில்லி. 56. ஜயந்தியன், S., டிக்கோயா. 57. ஜயவிஜயன், S., திண்டுக்கல். 58. ஜீவானந்தன், T., நுங்கம்பாக்கம். 59. ஜகதாம்பிகை. பதுளை 60. ஜஸிமா, மஜீத், யாழ்ப்பாணம். 61. ஜோதிசங்கர், G. N., திருப்பூர். 62. ஜோதிகிருஷ்ணன், T. N., மதுரை. 63. ஜோசப், A., மதுரை. 64. ஜஸ்டின், V., திருவனந்தபுரம். 65. ஜெதீந்திரநாத், S., சிவகாசி. 66. ஜம்பகலக்ஷ்மி, சாமிநாதன், மண்டபம் காம்ப்.

வையாதே தம்பி!

'ஜோதிமாமா'

வையா தேதம்பி—யாரையும்
வையா தேதம்பி
வையப் போனல் பெரிய சங்கடம்;
வையா தேதம்பி.

கழுதை என்று வைதா யானல்
கழுதை ஆவாரோ?—தம்பி
கழுதை ஆவாரோ?
கழுதை போலத் துணியைச் சுமக்கும்
காரியம் செய்வாரோ?—அதனல் (வையாதே)

பன்றி என்று வைதா யானல்
பன்றி ஆவாரோ?—தம்பி
பன்றி ஆவாரோ?
பன்றி செய்யும் தோட்டி வேலே
பாரினில் யார்செய்வார்?—அதனல் (வையாதே)



மாடே என்று வைதா யானல்
மாடவர் ஆவாரோ?—தம்பி
மாடவர் ஆவாரோ?
மாடு போலே வயலை உழுகிற
மாட்சி அவர்க்குண்டோ?—அதனல் (வையாதே)

நாயே என்று வைதா யானல்
நாய்தான் ஆவாரோ?—தம்பி
நாய்தான் ஆவாரோ?
நாயைப் போல நன்றியை மறவா
நன்மை அறிவாரோ?—அதனல் (வையாதே)

குரங்கே என்று வைதா யானல்
குரங்கவர் ஆவாரோ?—தம்பி
குரங்கவர் ஆவாரோ?
குரங்கும் ஒருகால் ராமன் துணையாய்க்
கொள்ள உதவியதே—அதனல் (வையாதே)

மரமே என்று வைதா யானல்
மரந்தான் ஆவாரோ?—தம்பி
மரந்தான் ஆவாரோ?
மரமே யன்ரே வெயிலுக்கு நிழலை
வழங்குவ தறியாயோ?—அதனல் (வையாதே)

பாரதியார்

கி. வா. ஜகந்நாதன்

பாரதியார் என்றுலே எனக்கும் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் கவிச் சக்கரவர்த்தி சி. சுப்பிரமணிய பாரதியாருடைய ஞாபகந் தான் உண்டாகும். சுப்பிரமணியன் என்பது தகப்பனுர் வைத்த பெயர். பாரதி என்பது அவருடைய பெருமையை அறிந்தவர்கள் வைத்த பெயர். பாரதி என்பதற்குக் கலைமகள் என்று அர்த்தம். கலைமகளே அவதாரம் செய்தது போன்ற கலைக் களஞ்சியமாக இருக்கிறவர்களுக்குப் பாரதி என்ற பட்டப் பெயர் கொடுப்பார்கள். நம்முடைய பாரதியாருக்கு முன்பு பல பாரதிகள் இருந்திருக்கிறுர்கள்; அவருக்குப் பின்பும் பல பாரதிகள் உண்டு. ஆனுல் பாரதியார் என்று சொன்ன மாத்திரத்திலே நமக்கெல்லாம் "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்ற பாட்டைப் பாடின நம்முடைய சுப்பிரமணிய பாரதியாரைத்தான் நினைக்கத் தோன்றுகிறது. காரணம் என்ன? அவர் இத்தனை பாரதிகளிலெல்லாம் சிறந்தவர்.

இந்தியா இப்போது சுதந்தரம் அடைந்து விட்டது. இதற்குமுன் அடிமை வாழ்வில் நாம் இருந்தோம். அப்போது நமக்கு இருந்த சுதந்தரப் பசியை அவர் பாட்டாகப் பாடினுர். சுப்பிரமணிய பாரதியார் நமக்குச் சுதந்தரம் கிடைப்பதற்கு முன்பே இறந்து விட்டார். ஆனுல் சுதந்தரம் வந்தபிறகு

பாடுவதற்குக்கூட அவர் கவி களைப் பாடி வழங்கியிருக்கிறார். "ஆடுவோமே பள்ளுப் பாடு வோமே" என்ற பாட்டை நீங்கள் கேட்டிருப்பீர்களே, "ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோம்" என்று பாடும் பாட்டை முன்பே அவர் பாடி விட்டார். இப்படிப் பின்னாலே வருவதை முன் கூட்டியே தெரிந்துகொண்டு சொல்பவர் களைத் தீர்க்கதரிசிகள் என்று சொல்வார்கள். நம்முடைய பாரதியார் சிறந்த தீர்க்கதரிசி.

பாரதியார் எட்டையபுரத் தில் 1882–ஆம் வருஷம் நவம் பர் மாதம் பிறந்தார். அவரு டைய தகப்பனார் சின்னசாமி ஐயர்; தாயார் லக்ஷ்மி அம் மாள். எட்டையபுரம் ஒரு சிறிய சம்ஸ்தானம். அதில் உள்ள ஜமீன்தாரை ஊர்க்கா ரர்கள் ராஜா என்று சொல் வார்கள். பெரிய ராஜாவாக இல்லாவிட்டாலும் குட்டி ராஜாவுக்கு ஏற்றபடி சின்னச் சின்ன ஆடம்பரமெல்லாம் இருக்கும். அரண்மனைகூட உண்டு.

சின்னசாமி ஐயருக்கு அரண் மனையில் உத்தியோகம். நல்ல அறிவாளி. கணக்கில் புலி. எந்த யந்திரமானாலும் ஓடித் துப் பார்ப்பார்; முடுக்கிச் சேர்ப் பார். துறுதுறுத்த கை, துறு துறுத்த புத்தி. அவருக்குப் பிள்ளையாகப் பிறந்த சுப்பிர மணிய பாரதியாருக்கோ கணக்கென்றால் வேப்பங்காய். ஐந்து வயசிலேயே அம்மாவை இழந்தார் பாரதியார். அவர் தகப்பனார் தாயில்லாக் குழந்தையிடம் அதிக அன் போடிருந்தார். அவரே படிப் புச் சொல்லித் தந்தார். தாயு மானவர் பாட்டு, கம்பராமாய ணம், திருக்குறள் எல்லாவற் றையும் சொல்லித் தந்தார். தமக்குப் பிரியமான கணக்கைக் கூடச் சொல்லித் தந்தார். பாரதியாருக்குக் கணக்கு வந் தால்தானே? கணக்குக்குரிய வாய்பாட்டிலே அவர் மனசு செல்லாது. ஆனால் கவிதைக் குரிய வாய்பாட்டிலே ஊன்றி நிற்பார். "கணக்குப் போட வாடா" என்று அப்பா அழைப்பார். பாரதியார், "கணக்கு-பிணக்கு-வணக்கு-மணக்கு-ஆமணக்கு" என்று எதுகை வாய்பாட்டை மன சுக்குள்ளே அடுக்குவார். கணக்கைச் சரியாகப் போட மாட்டாமல் விழிப்பார். "முழிக்கிற முழியைப் பார்" என்று அப்பா சொல்வார். அதிலிருந்து மற்றோர் எதுகை வரிசை ஆரம்பமாகும்; "முழி-பழி-குழி-வழி-பிழி-சுழி" என்று வாய்விட்டே சொல்லி விடுவார்.

பதினொரு வயசு நடக்கும் போதே பாரதியார் கவி பாடத் தொடங்கி விட் டார். அவர் காதில் விழும் வார்த்தைகளெல்லாம் அவரு டைய கவிக்கு உபயோகப் படும். விளையாட்டாகக்

கவிதை இயற்றுவார். சின்னப் பையன் கவி பாடுகிறுன் என்ருல் கேட்கிறவர்களுக்கு ஆச்சரியம் உண்டாகாதா? எல்லோரும் அந்தப் பையனைக் கவனிக்கத் தொடங்கினுர்கள். இதைப் பாடு, அதைப் பாடு என்று கேட்டுத் தூண்டிவிட்டார்கள். பாரதியார் அவர்கள் கேட்கிறபடியெல்லாம் கவி பாடுவார். அப்படிப் பாடுவதில் அவர் பிரமாதமாகச் சிரமப்படுவதே இல்லை. அருவி ஓடுகிறது; குயில் கூவுகிறது; மயில் ஆடுகிறது; சிங்கம் பாய்கிறது. இந்தக் காரியங்கள் பார்க்க நமக்கு ஆச்சரியமாக இருக்கின்றன. ஆனுல் அவைகளுக்கு இயற்கையானவை. அப்படித்தான் பாரதியாருக்குக் கவிபுனைவது என்பது உடன்பிறந்ததாகி விட்டது.

'ராஜா' இருக்கிற சம்ஸ்தானத்தில் வித்துவான்கள் இருப்பார்கள். வேறு ஊர்களிலிருந்தும் அடிக்கடி புலவர்கள் வருவார்கள். அவர்கள் பாரதியாரின் கவிதா சக்தியை உணர்ந்து வியப்படைவார்கள். தமக்குச் சமானமானமாக அவரை வைத்துக் கொண்டு பேசுவார்கள்.

அந்த ஊரில் இருந்தவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. "இந்த இளம்பிள்ளை இவ்வளவு அருமையாகப் பாடுகிறுனே; இவனுக்கு ஏதாவது பட்டம் அளிக்க வேண்டும்" என்று நினைத்தார்கள். படித்த வித்துவான்களும், பாட்டைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டும் அன்பர்களும் சேர்ந்து ஒரு பெரிய சபை கூட்டினுர்கள். அந்தச் சபையில் பாரதி என்ற பட்டத்தைச் சுப்பிரமணியனுக்குச் சூட்டினுர்கள்.

எட்டையபுரத்தில் சின்ன வயசில் படித்தார். பிறகு திருநெல்வேலியில் உள்ள ஹிந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார். ஐந்தாம் பாரம் வரையில்தான் அங்கே படித்தார். மாணுக்கராக இருந்தாலும் அவர் பாரதியாரே அல்லவா? ஆகவே அவர் கவி பாடிக்கொண்டே இருந்தார்.

காந்திமதிநாதபிள்ளை என்ற ஒரு கனவானுக்குப் பாரதியாருக்கு இருந்த புகழைக் கண்டு சகிக்கவில்லை. 'சின்னப் பிள்ளையாண்டான்; இவனைப் போய்க் கவியென்றும் பாரதியென்றும் உச்சாணிக்கொப்பில் தூக்கி வைக்கிறுர்களே!' என்பது அவர் எண்ணம். ஒரு நாள் பல அறிஞர்கள் கூடியிருந்த இடத்தில் காந்திமதிநாதபிள்ளையும பாரதியாரும் சந்தித்தார்கள். பாரதியாரை அவமானப்படுத்த வேண்டும் என்பது காந்திமதிநாத பிள்ளையின் ஆசை. அவர் பாரதியாரைப் பார்த்து, "உம்மை எல்லோரும் கவிஞர் என்று சொல்கிறுர்களே. நான் கடைசி அடி தருகிறேன்.

அதை வைத்து ஒரு வெண் பாப் பாடுவீரா?" என்று கேட்டார். பாரதியார் ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டார். காந்திமதிநாத பிள்ளை குறும்புத்தனமாக, "அப்படியானால், பாரதி சின்னப்பயல் என்பதைக் கடைசி அடியாக வைத்துப் பாடும்" என்றார்.

காந்திமதிநாத பிள்ளையின் விஷம புத்தி பாரதியாருக்குத் தெரிந்துவிட்டது. 'இத்தனை பேருக்கு நடுவில் நம்மைச் சின்னப் பயல் என்று சொல்லி விட்டதால் மகிழ்ச்சி அடைகிறார் இந்தமனுஷர். இவருக்குச் சரியானபடி பதில் கொடுக்க வேண்டும்' என்று அந்தச் சிங்கக்குட்டி நினைத்தது. பாட்டு வந்து விட்டது. 'பாரதி சின்னப்பயல்' என்ற ஈற்றடியை வைத்து ஒரு வெண்பாவைப் பாடிவிட்டார் பாரதியார்.

"....காந்திமதி நாதனைப் பாரதி சின்னப் பயல்."

என்பது பாட்டின் முடிவு. இதைக் கேட்டுப் பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். 'காந்திமதி நாதனைப் பார், அதி சின்னப் பயல்' என்று பிரித்து அர்த்தம் செய்யும்படி பாட்டைப் பாடினார். பிள்ளைவாள், பாரதியாரைச் சின்னப் பயல் என்று மாத்திரம் சொன்னார்; அந்த இளங்கவியோ அப்படிச் சொன்னவரை அதி சின்னப் பயல்—மிகவும் சின்னப் பயல் ஆக்கிவிட்டார்.

இந்தச் சமாசாரம் ஊர் முழுவதும் பரவி விட்டது. பாரதியாரின் புகழ் பின்னும் உயர்ந்தது. ஒரு நாள் தமிழ் வகுப்பில் பாடம் நடந்துகொண்டிருந்தது. தமிழ் வாத்தியார் பாரதியாரை ஏதோ ஒரு கேள்வி கேட்டார். பாரதியார் தக்க விடை சொல்லவில்லை. சும்மா இருந்தார். "என்னப்பா, உன்னைப்பற்றி ஊரிலெல்லாம் பிரமாதமாகச் சொல்கிறார்கள். காளமேகம்போல் கவியைப் பொழிவதாகப் பாராட்டுகிறார்கள். அந்தக் காளமேகம் இப்போது ஒன்றும் பேசாமல் சும்மா இருக்கிறதே!" என்று கிண்டலாகக் கேட்டார் வாத்தியார். பாடத்தில் கேட்ட கேள்விக்குப் பாரதியார் பதில் சொல்லவில்லை. ஆனால் கிண்டலாக வாத்தியார் கேட்ட இந்தக் கேள்விக்குப் பதில் உடனே வந்துவிட்டது. "வாத்தியார் நினைக்கிற போதெல்லாம் மேகம் மழை பொழியுமா? மேகம் ஒருவருக்கு அடங்கி அவர் விருப்பப்படி மழை பொழிவதில்லையே! இந்த விஷயம் ஐயாவுக்குத் தெரியாதா?" என்றார் பாரதியார். பையன்கள் எல்லாம் சிரித்தார்கள்.

பாரதியாருக்கு ஓர் அத்தை இருந்தாள். அவளுடைய கணவர் காசியில் வேலையாக இருந்தார். பாரதியார் அங்கே போய்ச் சில வருஷங்கள் படித்

தார். வடமொழி, ஹிந்தி ஆகிய பாஷைகளில் அவர் அறிவுபெற்ருர். மறுபடி 1901–ஆம் வருஷம் எட்டைய புரம் வந்து அப்பாவைப்போல அரண்மனை உத்தியோகம் பார்க்கத் தொடங்கிஞர். எட்டையபுரம் ராஜாவுக்கு அவரிடத்தில் அதிகப் பிரியம். ஆனுலும் பாரதியார் அந்த ஊரிலே இருக்க விரும்ப வில்லை. மதுரைக்கு வந்து சில காலம் தமிழாசிரியராக இருந் தார். அந்த வேலையும் அவ ருக்குப் பிடிக்கவில்லை. சென் னைக்கு வந்து 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரிய ராக இருந்தார். பிறகு "இந் தியா" என்று ஒரு பத்திரிகை யைத் தாமே நடத்தத் தொடங்கிஞர். அப்போது அவருக்கு 25 வயசு.

இந்தியாவின் அடிமை வாழ் வைப் போக்க வேண்டுமென்ற கிளர்ச்சி இந்த நாட்டில் அப் போது ஏற்பட்டிருந்தது. திலகர் நம்முடைய நாட்டுக் குச் சுயராஜ்யம் வேண்டும் என்பதைப் பிரசாரம் செய் தார். பாரதியாரிடம் தீவிர மான தேசபக்தி முளைத்து வளர்ந்தது. பல கவிதை களைப் புனைந்தார். சுடச்சுட எழுதிஞர். அவருடைய எழுத்து வழவழ வென்று இராது. அதில் வீரம் கொப் புளிக்கும். அரசாங்கத்தார் 'இந்தியா' பத்திரிகைக்குத் தடை போட்டார்கள். தம்மை யும் சிறையில் இடுவார்கள் என்று எண்ணிப் பாரதியார் புதுச்சேரிக்குப் போய்விட் டார்.

புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்க ளுடையது. பிரிட்டிஷ் அர சாங்கத்தின் வெறுப்புக்கு ஆளான பல தேசபக்தர்கள் அந்த ஊரில் இருந்தார்கள். அரவிந்தர், வ. வே. சு. ஐயரைப் போன்ற தேசபக்தர்களோடு பாரதியாரும் போய்ச் சேர்ந்து கொண்டார். புதுச்சேரியில் சில காலம் 'இந்தியா" பத்தி ரிகையை நடத்திஞர். பிறகு அது நின்று போயிற்று. அற்புதமான கவிதைகளைப் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்து வந்தபோது பாடிஞர்.

1918-ஆம் வருஷம் பாரதி யார் மறுபடியும் சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் வேலைபார்க்கத் தொடங்கிஞர். 1921-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி பாரதி யார் உலகவாழ்வைப் பிரிந்தார்.

39-வருஷங்கள் பாரதியார் வாழ்ந்தார். அதற்குள் அவர் செய்த காரியம் பல. அழகான கவிதைகளை, இதற்கு முன் இல்லாத சுவைகளையெல்லாம் காட்டும் இனிய கவிதைகளை, அவர் இயற்றியிருக்கிருர். சின் னக் குழந்தைகளுக்காக அவர் பாடிய 'பாப்பா பாட்டு' மிகவும் நல்ல பாட்டு. குழந்தைக ளெல்லோரும் படித்துப் பாடம் பண்ணிப் பாட வேண் டிய பாட்டு.

குற்றம் யார்மேல்?

கே. ஆர். ராமசந்திரன்

"வஸந்தி வரட்டும்", "வஸந்திக்கும் சேர்த்துக் கொடம்மா!", "வஸந்தி, விளையாட வாயேன்!" என்று காலைமுதல் மாலைவரை சதா வசந்தியுடனேயே இருக்கும் கிட்டு சென்ற இரண்டு நாட்களாகவே அவளைப்பற்றிப் பேசாமல் இருந்தது அவன் அப்பா, அம்மாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஏன், இரண்டு நாளாகவே கிட்டு சரியாகச் சாப்பிடுவதில்லை. கலகலவென்று பேசுவதில்லை.

ஆபீஸுக்குப் புறப்படும் அப்பாவுடன் அம்மா அடுத்த அறையில் பேசிக்கொண்டிருந்தது, புஸ்தகங்களை எடுத்துக் கொண்டிருந்த கிட்டுவின் காதில் விழுந்தது.

"வந்து, இரண்டு நாளாகவே குழந்தை ஒரு மாதிரியாக இருக்கிறனே; நீங்கள் ஏதாவது சொன்னேளா, என்ன?"

"நான் என்ன சொன்னேன்?"

"நீங்களும் ஒன்றும் சொல்லல்லேன்னு ஏன் இப்படி இருக்கான்?

கிட்டுவுக்குப் பள்ளிக்கூட நேரமாய்விட்டதால் புறப்பட்டு விட்டான். அவன் மனத்திலும் நிம்மதியில்லை. என்ன செய்தும் அவனுல் வாத்தியார் கொடுத்த நான்கு வீட்டுக் கணக்குகளைப் போட முடியவில்லை காலைமுதல் ஒன்றும் படிக்கவும் இல்லை.

பள்ளிக்கூடத்துக்குத் தனியாகப் போவது என்னவோ போல் இருந்தது. அப்பா! எவ்வளவு நாள் வஸந்தியுடன் சேர்ந்து சிரித்துப் பேசிக்கொண்டு சென்றிருக்கிறன்? ஆனல் இன்றே?

'நன்ருய் வேணும்! தனியாகவே வரட்டும்' என்று கறுவிக்கொண்டான்.

'அவள் என்னைப் பார்த்து அப்படிச் சொல்வதா? இன்று கணக்குப் போடவில்லையே! வாத்தியார் அடித்தால்? ஒரு வேளை அவள் மட்டும் போட்டிருந்தால்?–கிடக்கிருள்! அவள் போட்டால் என்ன, போடாவிட்டால் என்ன? நான் போடவில்லையென்று சிரிப்பாளோ? அவள் மட்டும் சிரிக்கட்டும், அப்புறம் சொல்கிறேன்.'

கிட்டுவின் மனத்தில் மாடிப்படி போல் எண்ணங்கள் எழுந்து கொண்டே இருந்தன.

'வஸந்தி–கிட்டு' என்று இணை பிரியாதிருந்த இருவரும் தனித்தனியாக வருவது வகுப்பில் மற்ற மாணவ, மாணவிகளுக்கும் ஏன், வாத்தியாருக்கும்கூட ஆச்சரியமாய் இருந்தது.

"ஏண்டா கிட்டு–ஏன் தள்ளி உட்கார்ந்திருக்கிறாய்? வஸந்தியுடன் டுவா, என்ன?" என்று அவர்கூடக் கேட்டார்.

பிரியாதிருந்த இருவரும் பிரியும்படி அப்படி என்ன நடந்துவிட்டது?

வஸந்தியும் கிட்டுவும் பள்ளிக்கூடத்தியிலிருந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தனர். கூட வாயாடி விஜயாவும் வந்துகொண்டிருந்தாள்.

வெகு நாளாகவே விஜயாவுக்கு வஸந்தி-கிட்டு இருவர் மீதும் பொறாமை. இருவரும் நன்றாகப் படிக்கிறார்கள்; நல்ல மார்க் வாங்குகிறார்கள். தன்னையோ ஒருவரும் மதிப்பதேஇல்லை வாயாடி, திருடி என்றெல்லாம் ஏசுகிறார்கள். எப்படியாவது இவர்களைப் பிரித்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தாள் விஜயா.

அன்று கிட்டுவின் புது ஸ்குரு பென்சிலைத் தொலைத்துவிட்டாள் வஸந்தி. சாதாரணமாகக் கிட்டு அதைப் பொருட்படுத்தியிருக்கவே மாட்டான்.

"கிட்டு, உன் பென்சிலைக் காணோமடா!" என்று அழமாட்டாக் குறையாகச் சொன்னாள் வஸந்தி.

"இல்லேடா-வீட்டில் வைத்துக் கொண்டு பொய் சொல்கிறாள். நான்கூட நேற்று அவள் வீட்டில் பார்த்தேன்." - இது விஜயாவின் சரடு.

'இல்லவே இல்லை - அவள் பொய் சொல்கிறாள். நிஜமாகவே வகுப்பில் வைத்திருந்த பென்சிலைக் காணோம்.''

கிட்டுவுக்குத் தெரியும், வஸந்தி பொய் சொல்லமாட்டாள் என்று. விஜயாவாவது 'திருடி' என்று பெயர் எடுத்தவள். மேலும் இவ்வளவு நாள் பழகிய வஸந்தி தன்னையே ஏமாற்றுவாளா?

"போனால் போகிறது போ! இதற்காகக் கவலைப்படாதே" என்று கூறித் திரும்பிய கிட்டுவின் கண்களில் வஸந்தியின் பையில் புஸ்தகங்களுக்கு மேல் இருந்த ஸ்குரு பென்சில் பட்டது.

"அதோ, அங்கே இருக்கே உன் பையில்!" என்று கிட்டு அதைக் கையில் எடுத்தான். வஸந்தி திணறிப் போனாள்.

"டேய் கிட்டு, நிஜமாக அது எப்படி வந்தது என்றே எனக்குத் தெரியாதுடா! நான் ஸ்கூலில் புஸ்தகங்களை எடுத்துப் பையில் போடும்போது அது இல்லைடா!"

"பார்த்தியா, நான்தான் சொன்னேனே! இப்போ தெரிஞ்சுதா!" என்றாள் விஜயா.

கிட்டுவுக்கும் சிறிது சந்தேகம். இருந்தாலும் மனத்தின் ஓர் ஓரத்தில், 'சே! அப்படி இருக்காது. நம் வஸந்தியா பொய் சொல்வாள்?' என்று தோன்றியது.

தன்னுடன் பேசாமலே வந்த கிட்டுவின் மனத்தை ஊகித்துக் கொண்டாள் வஸந்தி. விர்ரென்று முன்னால் சென்ற அவனைப் பார்த்து "ஒரு பென்ஸில் உனக்குப் பிரமாதமாய்விட்டதா? உன் பென்ஸில் எனக்கு வேண்டாம். இந்தா!" என்று அதை வீசி எறிந்தாள். அது கிட்டுவுக்குச் சுரீர் என்றது. என்ன இருந்தாலும் ஆண்பிள்ளையல்லவா? ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது.

அன்று மாலை முழுதும் வஸந்தியின் வீட்டுப் பக்கமே கிட்டு தலைகாட்டவில்லை. இரவு சாப்பிட்டபின் வஸந்தி வந்து கூப்பிட்டபோது. தலைவலி என்று கூறிப் போகாமல் இருந்துவிட்டான்.

என் ஸ்குரூ பென்ஸிலை எடுத்ததுமல்லாமல் என்னெதிரில் வீசி எறிந்தாளே' என்று எண்ணினான் கிட்டு.

மறுநாள் காலையில் வஸந்தி எவ்வளவு சொல்லியும் கிட்டுவுக்கு மனச் சமாதானம் ஏற்படவில்லை. உண்மையில் குற்றமே செய்யாத அவள் உண்மயை எடுத்துச் சொல்லத் தெரியாது விழித்தாள். பாவம்! விஜயா செய்த திருட்டுத்தனம் இவர்களுக்கு எங்கே தெரியும்?

பள்ளிக்கூட மணி அடித்ததும் வகுப்பில் மாணவ, மாணவிகள் தங்கள் தங்கள் இடங்களில் உட்கார்ந்தார்கள்.

கிட்டுவுக்கு மனசு 'பக்பக்' என்று அடித்துக்கொண்டது. வாத்தியார் வீட்டுக் கணக்கு நோட்டுகளைப் பார்வையிட்டுக் கொண்டே வந்தார். அதோ கோபு போடவில்லை!

"பளீர்-பளீர்." - கையில் பிரம்பினால் இரண்டு இழுப்பு.

கிட்டுவின் முறை வந்தது.

' எங்கே கிட்டு நோட்புஸ்தகம்? கணக்குகள் எங்கே?"

கிட்டு இரண்டு நாட்களாகவே வகுப்பில் கவனிக்காமல் ஒரு மாதிரியாக இருப்பதில் வாத்தியாருக்குச் சற்றுக் கோபம். பதில் சொல்லத் தெரியாமல் கிட்டு எழுந்து நின்றான். இதுவரை அவன் இப்படி நின்றதே இல்லை.

கால் கட்டைவிரல் மிதிபடுவதை உணர்ந்த கிட்டு கீழே குனிந்தான். டெஸ்குக்குக் கீழே கையில் பிரித்த நோட்டை நீட்டிக்கொண் டிருந்தாள் வஸந்தி.

"இதோ இருக்கு, சார்" என்று டெஸ்கிலிருந்து எடுப்பவன்போல் நோட்டை வாங்கி மேலே வைத்தான் கிட்டு.

வாத்தியாருக்கென்ன? அவசரத்தில் எழுத்தையா பார்க்கிருர்? கணக்குகள் இருக்கின்றனவா என்று பார்த்தார். விடைகளுக்கு எதிரே நான்கு ரைட் மார்க்குகள் விழுந்தன.

அடுத்தது வஸந்தியின் முறை. கிட்டு அதைப்பற்றி அப்போதுதான் யோசித்தான்: 'ஆமாம்; அவள் என்ன செய்வாள்?'

"எங்கே, வஸந்தி, உன் நோட்டு?"

தன் நோட்டுப் புஸ்தகத்தைத் தேடுவதுபோல் பாசாங்கு செய்தாள் வஸந்தி.

"சார் - நோட்புக் கொண்டு வர மறந்துபோய்விட்டேன், சார்!"

"என்ன? கணக்குப் போடாமல் வந்ததுமின்றிப் பொய் வேறு சொல்கிருயா? நீட்டு கையை?"

கிட்டுவின் மனம் பதறியது. அவன் ஆண்பிள்ளை; அடி வாங்கலாம். ஆனல் வஸந்தி? 'ஏன் வஸந்தி அப்படிச் செய்தாள்? நான் ஏன் அவள் நோட்டை வாங்கினேன்? பாவம்!'

அதோ, வஸந்தி கையை நீட்டிவிட்டாள். பிரம்பும் மேலே போய்விட்டது. அடி விழுவது தான் பாக்கி—

"சார், சார் - தப்பு என்னுடையதுதான், சார் - அவளை அடிக்காதீர்கள், சார்!" என்று பாய்ந்து வஸந்தியின் கைகளைப் பிடித்த கிட்டுவின் கையில் பளீர் என்று அடி விழுந்தது.

வகுப்பில் எல்லோரும் அவனையே பார்த்தனர். வாத்தியார் திகைத்து நின்ருர்.

தனக்கும் வஸந்திக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தையும் அவளுடன் தான் பேசாமல் இருந்ததையும், தான் கணக்குப் போடாமல் வந்ததையும், வஸந்தி தன் நோட்டைக் கொடுத்ததையும் அப்படியே சொன்னுன் கிட்டு.

வாத்தியார் வஸந்தியின் முகத்தைப் பார்த்தார். அவள் குழந்தைக் கண்களில் தியாகக் கண்ணீர் தேங்கி நின்றது.

இவர்கள் இருவரும் இப்படி இருக்கும்போது திடீரென்று விஜயா தன் இடத்திலிருந்து ஓடி வந்தாள். "சார் - தப்பு முழுவதும் என்மேல்தான், சார். அவர்கள் இருவரையும் பிரித்துவைக்க, நான்தான் சார், ஸ்குரூ பென்ஸிலைத் திருடி வீட்டுக்குப் போகும்போது வஸந்தியின் பையில் போட்டேன். என் தப்பிதத்திற்கு என்னை அடியுங்கள், சார்!" என்று அழுதாள்.

வாத்தியாருக்கும் மற்ற மாணவ, மாணவிகளுக்கும் இரண்டு நாளாகவே கிட்டுவும் வஸந்தியும் ஒரு மாதிரியாக இருப்பதன் மர்மம் விளங்கியது. தன் குற்றத்தை உணர்ந்து திருந்திய விஜயாவை வாத்தியார் தேற்றி மன்னித்தார். அடிபட்ட கிட்டுவின் கையைத் தடவிக் கொடுத்தார். கிட்டு, வஸந்தி இருவரும் மறுபடி ஒன்று சேர்ந்ததில் எல்லாருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி.

அன்று மாலை கிட்டுவின் வீட்டில் இரண்டு நாளாகத் தொடாமல் வைத்திருந்த சாக்லெட் பாக்கெட்டை வஸந்தியும் கிட்டுவும் பங்கு போட்டுக்கொண்டு சிரித்துக்கொண்டே காலிசெய்தது இருவருடைய பெற்ருேருக்கும் சந்தோஷமாக இருந்தது.



மந்திரப் பூக்கள்

அர்ச்சகர் ஒருவர் தினம் மூன்று கோயில்களுக்குப் போய் அர்ச்சனை செய்வது வழக்கம். தோட்டத்தில் சில பூக்களைப் பறித்து எடுத்துக்கொண்டு முதல் கோயிலுக்குப் போவார். பூக்களின்மேல் தண்ணீர் தெளிப்பார். உடனே அந்த மந்திரப் பூக்கள் இரு மடங்காகிவிடும். அந்த ஸ்வாமிக்குச் சில பூக்களை அர்ச்சனை செய்துவிட்டு, பாக்கிப் பூக்களை எடுத்துக்கொண்டு அடுத்த கோயிலுக்குப் போவார். மறுபடியும் தண்ணீர் தெளித்ததும் கொண்டுவந்த பூக்கள் இரு மடங்காகிவிடும். முதல் கோயிலில் எவ்வளவு பூக்கள் போட்டாரோ அவ்வளவு பூக்களை அந்தக் கோயிலிலும் போடுவார். பாக்கியை எடுத்துக்கொண்டு மூன்றுவது கோயிலுக்குப் போவார். அங்கும் முன்போலவே கையிலிருக்கும் பூக்கள் இரு மடங்காகிவிடும். ஆனால் இந்தத் தடவை எல்லாப் பூக்களையும் ஸ்வாமிக்கே போட்டுவிடுவார். அப்போதுதான் மூன்று கோயில்களிலும் போட்ட பூக்கள் சரிசமமாக இருக்கும். அப்படியானால் அவர் தோட்டத்திலிருந்து கொண்டுபோன பூக்கள் எவ்வளவு? போட்டது எவ்வளவு?

—K. திருநாவுக்கரசு, கண்ணன் கழகம்.

(விடையைக் கண்டுபிடிக்க முடியாதவர்கள் வேறு பக்கத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள், ஆ-ர்)

*   *   •   *

எழுதும் கையை எடுக்காமல் போட்ட கோட்டின்மேல் போகாமல் இதைப்போலப் போடவேண்டும்.

—வி. சாந்தா, விழுப்புரம்.

(விடை வேறு பக்கத்தில் இருக்கிறது—ஆ-ர்)

டில்லிக்குப் போனேன்
நேருவைப் பார்த்தேன்
சல்யூட் அடித்தேன்
சாக்லெட் கொடுத்தார்.

—B. M. செங்கோட்டையன் (C. 43)

* * * *

சின்னக் கணக்கு

சின்னக் கணக்கில்தான் சீக்கிரத்தில் ஏமாந்து போவோம். எங்கே உங்கள் சாமர்த்தியத்தைப் பார்க்கலாம். மலைப்பாங்கான ஊருக்கு நாங்கள் மோட்டார் வண்டியில் போனோம். மேட்டில் போக வேண்டியிருந்ததால் மணிக்குப் பத்து மைல் வேகத்தில் வண்டி போயிற்று. ஆனால் அந்த ஊரிலிருந்து திரும்பி வரும்போது சரிவானதால் மணிக்குப் பதினைந்து மைல் வேகத்தில் வண்டி வந்தது. அப்படியானால் மோட்டார் வண்டி மணிக்குச் சராசரி எத்தனை மைல் வேகத்தில் ஓடியிருக்கும்?

—V. சரஸ்வதி, சென்னை, 4.

(உங்கள் விடையை இங்கே எழுதிவிட்டு, கடைசிப் பக்கத்திலுள்ள சரியான விடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்—ஆ-ர்)

* * * *

அன்புள்ள கண்ணன் ஆசிரியர் அவர்களே!

கீழே ஐந்து வரிசையில் எண்களைக் குறித்திருக்கிறேன். நீங்கள் ஏதாவது ஓர் எண்ணை நினைத்துக்கொள்ளுங்கள். அந்த எண் எந்த எந்த வரிசையில் இருக்கிறது என்பதைச் சொன்னால் நீங்கள் நினைத்துக்கொண்ட எண்ணைச் சொல்லிவிடலாம்.

அ	ஆ	இ	ஈ	உ
1	2	4	8	16
3	3	5	9	17
5	6	6	10	18
7	7	7	11	19
9	10	12	12	20
11	11	13	13	21
13	14	14	14	22
15	15	15	15	23
17	18	20	24	24
19	19	21	25	25
21	22	22		
23	23	23		
25				

(உ-ம்) நினைக்கும் எண் 23. அந்த எண் இருக்கும் வரிசைகள்: அ; ஆ; இ; உ. இந்த நாலு வரிசைகளிலும் உள்ள முதல் எண்களைக் கூட்ட வேண்டும். $1+2+4+16=23$. சரிதானா?

—R. அண்ணாமலைச்சாமி, (A. 82.)

(சரியேதான்!—ஆ-ர்.)

* * * *

வழியோடு போகும் ஒருவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்து, "தண்ணீருக்குப் பகையான மரத்தின் கீழே

...ஆவணக் காப்பக நூலகம்
2/1/77
சென்னை-600 008

முள்ளுக்குப் படல் கட்டிக்கொண் டிருப்பவனே! இந்த வழியே மூவர் இரு காலால் நடக்கக் கண்டாயோ?'' என்று கேட்டான்.

"கண்டேன். நுனிப் புல்லையும் விட்டு அடிப் புல்லையும் விட்டு நடுவாக மேய்ந்துகொண்டு போகக் கண்டேன்'' என்றான் மற்றவன்.

ஏதாவது புரிகிறதா, உங்களுக்கு?

தண்ணீரைத் தெளியவைக்கும் பகை தேற்றாங்கொட்டை. முள்ளுக்குப் படல் (பாதுகாப்பாக உபயோகப்படுவது) செருப்பு.

மூவர் இரண்டு காலால் நடப்பது எப்படி? ஒரு கர்ப்பஸ்திரீ. அவள் கையில் ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு போனாள். அவள் ஒன்று, கைக்குழந்தை ஒன்று, வயிற்றில் இருக்கும் குழந்தை ஒன்று - ஆக மூன்று பேர் ஆகின்றனர் அல்லவா? "தேற்றாங் கொட்டை மரத்தின் கீழே செருப்புத் தைத்துக்கொண் டிருப்பவனே, ஒரு கர்ப்பஸ்திரீ கையில் ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு போவதைக் கண்டாயா?'' என்றுதான் அவன் கேட்டான்.

அதற்கு மற்றவன் பதில் சொன்னது:

"ஆமாம், கண்டேன். வெற்றிலையின் அடியையும் நுனியையும் கிள்ளி எறிந்துவிட்டுப் பாக்கியைச் சுவைத்துக்கொண்டு போனாள்!''

—டி. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீவைகுண்டம்.

* * * *

பாட்டு

ஒன்று என்று சொல்லுவோம்; ஒற்றுமையாய் வாழுவோம்
இரண்டு என்று சொல்லுவோம்; இன்பமாக வாழுவோம்
மூன்று என்று சொல்லுவோம்; மூத்தவரைப் பணிகுவோம்
நாலு என்று சொல்லுவோம்; நல்ல வழியில் நடப்போம்
ஐந்து என்று சொல்லுவோம்; அச்சமின்றி வாழுவோம்
ஆறு என்று சொல்லுவோம்; ஆடம்பரம் நீக்குவோம்
ஏழு என்று சொல்லுவோம்; ஏழைக்கு உதவி செய்குவோம்
எட்டு என்று சொல்லுவோம்; துஷ்டச் சேர்க்கை தள்ளுவோம்
ஒன்பது என்று சொல்லுவோம்; ஓரினமாய் வாழுவோம்
பத்து என்று சொல்லுவோம்; பரமனைத் துதி செய்குவோம்.

—M. தெய்வானை, புதுப்பட்டி.

* * * *

பதினொரு காய்களை வரிசைக்கு மூன்று காய்கள் வீதம் பன்னிரண்டு வரிசையில் வைக்கவேண்டும். முடியுமா?

—S. ராமசந்திரன், மயிலாப்பூர்.

* * * *

அன்புமிக்க ஆசிரியருக்கு,

எனது கோடி வந்தனம். நீங்கள் அனுப்பிய பாட்ஜ் வந்தது. திரும்பவும் கூட்டம் நடந்தால் என்னை அழைக்கவும். நான் கூட்டத்துக்கு வந்திருந்தேன். வேடிக்கை, விகடம், விளையாட்டு, பரிசு கொடுத்ததையும் பார்த்து மகிழ்ந்தேன். கண்ணன் நீடூழி வாழ்க. பரிசு பெற்றவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவீர்களா?

—D. ஜகந்நாதன், கோமளீசுவரன்பேட்டை (J.10)

[எனது கோடி ஆசிகள். பரிசு பெற்றவர்கள் பெயர்களையும் கழக நம்பர்களையும் கிடைத்த பரிசுகளையும் எழுதியிருக்கிறேன்; பார்த்துக் கொள் (1) R. சுப்பிரமணியன் (R. 358), குளோப். (2). B. S. ராமகிருஷ்ணன் (R. 40), வாடர் கலர்ப் பெட்டி. (3) S. K. ராமசாமி (J. 73), கை சைகிள் மணியுடன். (5) V. S. கன்யாகுமரி (K. 67), பீட் விவிங் லூம். (6) D. சரளா (S. 161), மூன்று புத்தகங்கள். (7) C. V. சத்தியவதி (S 77), Word Builder. (8) S. K ஜயலக்ஷ்மி (J. 74), புத்தகங்கள். (9) R. ஸ்ரீநிவாஸன் (S. 335), தானே தண்ணீர் குடிக்கும் வாத்து. (10) R. தாரகராம் (T. 21), Wonder Book. (11) M. துரை (D. 47), அதிருஷ்ட நம்பர் விழும் பெட்டி. (12) K. பாலகிருஷ்ணன் (B. 80), புத்தகங்கள். ஆ - ர்.]

* * * *

விடை



* * * *

அர்ச்சகர் கொண்டுபோன பூக்கள்—7. அவர் போட்ட பூக்கள்—8.

* * * *

$12\frac{1}{2}$ மைல் அல்ல; 12 மைல்தான்.

* * * *

பதினொரு காய்களை இந்தமாதிரி வைக்கவேண்டும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

உங்களுக்காகவே ஒரு புத்தகம்!

ராஜாவும் குருவியும்

கதைகளில் இந்தக் காலத்துக் கதை வேண்டும், அந்தக் காலத்துக் கதை வேண்டாம் என்று யாரும் சொல்லமாட்டார்கள்! எந்தக் காலத்துக் கதையாக இருந்தாலும் அது நன்றாக இருக்கவேண்டும். அந்தக் காலத்தில் மட்டும் பிராணிகளும் பட்சிகளும் பேசிக் கொண்டா இருந்தன? யுத்தியைப் புகுத்தி அறிவைப் பெருக்க அதெல்லாம் ஒரு வழி.

அதே முறையில் குழந்தைகளுக்கு என்று தயாரானது இந்த அருமையான புத்தகம்.

மணி மணியான ஏழு கதைகள் இதில் இருக்கின்றன. பெரிய எழுத்தில் வர்ணப் படங்களுடன் 'ஜம்' மென்று இருக்கிறது புத்தகம். பழைய நரியையும் பழைய நாயையும் பழைய குருவியையும் பல உருவங்களில் படித்த குழந்தைகளுக்கு அந்தப் பிராணிகள் இங்கே வேறுமாதிரியில் நடப்பதைக் காண வேடிக்கையாக இருக்கும்; புதுமையாகவும் இருக்கும். சுவாரஸ்யத்துக்குக் கேட்பானேன்?

அந்தக் காலத்துச் 'சோமசன்மா'வின் பஞ்ச தந்திரக் கதைகளை ராஜகுமாரர்கள் படித்தார்கள். இந்தக் காலத்துச் 'சோமசன்மா'வின் கதைகளை நாமும் படிக்கத்தான் வேண்டும்; ரஸிக்கவும் வேண்டும். கை நிறைந்த பரிசு!

விலை 8 அணா

நீங்கள் கண்ணன் கழக அங்கத்தினர்களா?

அப்படியானால் உங்களுக்குக் கட்டாயம் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

Reg. No. M. 5542



கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல செளகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்‌ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இதற்குள் 2400 பேருக்குமேல் நிரந்தர அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டார்கள். உங்களுக்கும் இதில் சேரவேண்டுமென்று ஆசையாக இல்லையா? இதுவரை

யில் நீங்கள் சேராமல் இரு
இப்பொழுதுகூடச் சேர
சேருவது மிகவும் சுலபம். இ
இதழிலேயே ஒரு கூபன் இரு
கிறது. அதைப் பூர்த்தி செய்
கத்தரித்து அனுப்பவேண்டு
அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒ
வொரு மாதமும் கண்ணனி
வெளிவரும். தொடர்ந்து மூன்
மாதக் கூபன்களை அனுப்புகி
வர்கள் கண்ணன் கழக நிரந்த
அங்கத்தினர்கள். அவர்கள்
பெயரைக் கண்ணனில் வெளி
யிடுவோம். மூன்று மாதக்
களைப் பூர்த்திசெய்து
மாக அனுப்பினால்
அவர்களுக்கு இனமாக
பாட்ஜ் ஒன்று கழகத்தி
கிடைக்கும். இதற்குச்
தொகை எதுவும் இல
கூபன்கள்தான் அனுப்
டும். ஒரே குடும்பத்தில்
குழந்தைகள் ஒரு கூ
பூர்த்தி செய்து
வர்கள் பெயர்களையும்
சேர்த்து எழுதி அனுப்
அடுத்த இதழில் ஒரு
போட்டி வெளியா
அதில் கண்ணன் கழக அ
தினர்கள் மட்டுமே கல
கொள்ளலாம். மற்றவ
கலந்துகொள்வதற்
நவம்பர் மாதக் கண்ண
வளி மலராக வெளிவரும்.
பற்றிய விவரங்களை
இதழில் பாருங்கள்.